கோவில் தேவைகளுக்குரிய
★ குடை ★ கொடி
★ ஆலவட்டம்
★ வாகுமால்
என்பவற்றுக்கு

ஞானம்
ஆடையகம்

54, சோதியா தெரு,
யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சேட்டிங்
சூட்டிங்
சாறீஸ்
★ பிளவுஸ்பீஸ்
வகைகளுக்கு

ஞானம்
ஆடையகம்

54, சோதியா தெரு,
யாழ்ப்பாணம்.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 வைகாசி 01 திங்கட்கிழமை (15 05 – 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 169

# யாழ்ப்பாணத்தை கைப்பற்றும் பெரிய அளவு ராணுவ நடவடிக்கைக்கு தளபதி முனைப்பு

### எனினும் கிழக்கை கட்டுப்பாட்டில் கொண்டுவரவே இப்போது நாட்டம்

கொழும்பு, மே 15

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் மிகப்பெரிய இராணுவ நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இராணுவத் தளபதி விரும்புகிறார். ஆனால் வெவ்வேறான இரண்டு போர் முனைகளில் போரிட வேண்டியிருக்கும் என்பதால் கிழக்குப் பகுதியை முழுமையாக இராணுவம் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவந்த பின்னர்தான் அது இயலும்.

பி.பி.ஸி கொழும்புச் செய்தியாளர் ஜோர்ஜ் ஆர்னி இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்த தனது விமர்சனத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பி.பி.ஸி. செய்தியாளர் தனது விமர்சனத்தில் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி இன்று மக்கள் பார்வையிலிருந்து மறைந்து விட்டார் போல் தோன்றுகிறது. அவர் இன்று எந்த முடிவும் எடுப்பதில்லை.

ஜனாதிபதி தேசிய பாதுகாப்புச் சபையில் பெருமளவு நேரத்தை செலவிடுகிறார்.

வெள்ளிக்கிழமை பிரதி பாதுகாப்பு அமைச்சர் நாடாளுமன்றத்தில் அரசிடம் இரகசியத் திட்டம் ஒன்று இருக்கிறது. அரசு நிலைமையை முழுக்கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது.

என்பதை இத்திட்டம் காட்டும் என்று கூறி எடுக்கப்படவிருக்கும் இராணுவ நடவடிக்கை பற்றி தெளிவான அடையாளம் ஒன்றைக் காட்டினார்.

ஆனால் அரசு நிலைமையை கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது என்பதில் எவருக்கும் நம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

கிளிநொச்சியில் கடமையாற்றிய

### பிரெஞ்சு வைத்தியர் குழு கொழும்பு திரும்பியது

யாழ்ப்பாணம், மே 15

கிளிநொச்சி வைத்தியசாலையில் கடமையாற்றிய பிரெஞ்சு வைத்தியர் குழு தமது சேவையை திடீரென நிறுத்தி விட்டு நேற்று முன்தினம் கொழும்பு திரும்பியது.

இதனால் அங்கு சத்திர சிகிச்சை, மற்றும் பிரதான பணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

கொழும்புக்கிளை அலுவலகத்தில் இருந்து கிடைத்த அவசர அழைப்பின் பேரில் மருத்துவக் குழுவினர் கொழும்பு புறப்பட்டனர். (இ-3)

### இனப்பிரச்சினை தீர்வில் அரசு திடசங்கற்பம்

சந்திரிகா வெசாக்தின அறிவிப்பு

கொழும்பு, மே. 15

இலங்கையில் இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருவதில் அரசாங்கம் திடசங்கற்பம் கொண்டுள்ளது சமாதானத்தை கொண்டுவர எல்லா நடவடிக்கைகளையும் எடுப்பேன்.

வெசாக் தினத்தையொட்டி நாட்டு மக்களுக்கு விடுத்த அறிக்கையில் ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கா மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-க)

### 3 ஆவது நாட்டின் தலையீடு தொண்டமான் எதிர்ப்பு

இலங்கை இனப்பிரச்சினையில் மூன்றாவது நாடு ஒன்று தலையிடுவதற்கு இ.தொ.கா தலைவரும் அமைச்சருமான திரு. எஸ். தொண்டமான் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

கோயம்புத்தூரில் செய்தியாளர் மாநாடு ஒன்றின்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

தொண்டமான் மூன்றாவது நாடு என்று கூறியது இந்தியாவை மனதில் கொண்டே என்று அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டனர். (இ)

### இனப்பிரச்சினை தீர்வுக்கு 3 ஆம் தரப்பு ஒன்று தேவை

குமார்ரூபசிங்கா கூறுகிறார்

கொழும்பு, மே 15

மிக ஆழமானதும், சிக்கலானதுமான இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண மூன்றாவது தரப்பு ஒன்றுதேவை.

"இன்டர்நஷனல் அலேட்" அமைப்பின் செயலாளர் நாயகம் குமார் ரூபசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பி.பி.ஸி. சிங்களசேவைக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

உலகத்தில் மொஸாம்பிக், அங்கோலா, ஆப்கானிஸ்தான் நாடுகளில் நடந்த யுத்தங்கள் மூன்றாவது தரப்பு ஒன்றின் தலையீட்டாலேயே தீர்க்கப்பட்டன.

விடுதலைப் புலிகளும், அரசும் தற்போது யுத்தத்துக்கு தயாராகி வருகின்றபோதும், அந்நிலை நீடிக்காது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் மக்களிடமிருந்து புலிகளை தனிமைப்படுத்த அரசு முயன்றது

### பேச்சுதோல்விக்கு இதுவே காரணம் என்கிறார் வசந்தராஜா

தமிழ் மக்களிடம் இருந்து விடுதலைப் புலிகளை அரசு பிரித்து தனிமைப் படுத்த முயன்றமையே பேச்சுக்கள் தோல்வியடையக் காரணம்.

ரூபவாஹினிக் கூட்டுத்தாபன முன்னாள் தலைவர் மதியாபரணம் வசந்தராஜா மேற்கண்டவாறு பி, பி, ஸி. சிங்கள சேவைக்கு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது;-

விடுதலைப் புலிகளுக்கும், தமிழ் மக்களுக்கும் இடையில் பிரிவினையை ஏற்படுத்த ஜனாதிபதி முயன்றார். அந்த நோக்கத்தையே அவர் கொண்டிருந்தார்.

உடன்பாட்டுக்கு பரஸ்பர நம்பிக்கையை கட்டி எழுப்புவது மிக அவசியமாகும். நம்பிக்கையை கட்டி எழுப்புவதற்குப் பதிலாக தவிடு பொடியாக்கும் முயற்சியே உண்மையில் நடந்தது.

சமாதனத்தை ஏற்படுத்துவதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றார். (இ-3-6)

### சேலத்தில் பொலீஸார் கைப்பற்றிய விசைப்படகுகள் புலிகளுடையதா?

விசாரணை நடைபெறுகிறது

சென்னை, மே 15

சேலம் மாவட்டம் குடத்தூர் அருகே திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர் ஒருவரின் வயலிலிருந்து நான்கு விசைப்படகுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவை இரண்டு பேர் செல்லக்கூடிய விசைப்படகுகளாகும்.

இவற்றின் அமைப்புகளைப் பார்க்கும்போது இவை விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமானவையாக இருக்கலாம் எனவும் —

இது குறித்து விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் — தமிழ்நாடு பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

## மோதல் தவிர்ப்பை கண்காணிக்கவந்த குழுவினர் நாடு திரும்புகின்றனர்

கொழும்பு, மே 15

ஸ்ரீலங்கா அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையில் கடந்த ஜனவரி மாதம் ஏற்பட்ட மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை கண்காணிக்க இலங்கை வந்திருந்த மேற்கு நாட்டு பிரதிநிதிகள் இவ்வாரம் நாடு திருபப விருக்கின்றனர்.

மோதல்கள் தீவிரமாகியுள்ளதையடுத்து யுத்தத்தை நிறுத்துவதற்கான வாய்ப்புக்கள் குறைவாக இருப்பதாலேயே அவர்கள் தமது நாடுகளுக்கு திரும்ப இருப்பதாக தெரியவந்தது.

இலங்கை வந்து கொழும்பில் தங்கியிருந்த நோர்வே, நெதர்லாந்து, கனடா நாடுகளின் பிரதிநிதிகள் ஜனாதிபதியிடம் அறிக்கை ஒன்றை சமர்பித்த பின்னர் தத்தமது நாடுகளுக்கு திருப்புகின்றனர்.

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை அரசு சரியான முறையில் கடைப்பிடிக்காததை அடுத்து இவர்கள் தமது பணிகளை ஆரம்பிக்கவில்லை என்பதும் —

யாழ்ப்பாணம் வந்த இவர்கள் விடுதலைப்புலிகள் தலைவர் வே பிரபாகரனுடன் பேச்சு நடத்தியதும் — தெரிந்தவையே. [இ-3-7]

### படையினர் ஷெல் வீச்சு ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், மே. 15

புல்லாவெளி கட்டைக்காட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற ஷெல் தாக்குதல்களின்போது முளளியானில் ஒருவர் காயமடைந்தார் சில வீடுகளும் பெருமளவு மினகாய்ப்பயிர்களும் சேதமடைந்தன.

வேலாயுதம் பாக்கியவதி (வயது 51) என்பவரே காய

(6 ஆம் பக்கம் பார்க்க)

## "லேசர்" நவீன ஆயுதங்களையும் புலிகள் வாங்கலாம் என அச்சம்!

கொழும்பு, மே 15

போர் முனையில் எதிரியை குருடாக்கும் நவீன 'லேசர்' ஆயுதங்களையும் விடுதலைப் புலிகள் இனிமேல் வாங்கக் கூடும் என்று "த ஐலண்ட்" பத்திரிகையில் அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தோளில் வைத்து விமானங்களைத் தாக்கக் கூடிய வெப்பத்தை நாடிச் செல்லும் ஏவுகணைகளை விடுதலை புலிகளால் கொள்வனவு செய்ய முடியாது என்றே எமது படையினர் கருதி வந்தனர்—

இப்போது நடந்தது என்ன? எதிரியைக் குருடாக்க வல்ல "லேசர்" ஆயுதங்களை புலிகள் வாங்க மாட்டார்கள் என்று நம்புவது எப்படி? —

பெரும் தாக்குதல்களை நடத்தி போரை முடிவுக்குக் கொண்டு வராவிட்டால், விடுதலைப் "புலிகள்லேசர்" ஆயுதங்கள் வைத்திருக்கிறார்கள் என்று கூறும் காலம் மிக விரைவில் வந்துவிடும் — என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

பல கிலோமீட்டர் தொலைவிலிருந்தே எதிரியைக் குருடாக்க வல்ல 'லேசர்' நவீன ஆயுதங்களை சீனா விற்பனைக்கு விட்டுள்ளதாக அண்மையில் அறிவிக்கப்பட்டதையும் —

மேற்கு நாடுகளிடம் இந்தக் "கொடிய" ஆயுதம் இருப்பதாகவும் ஆனால் அவை அதனை விற்க முன்வரவில்லை என்பதும் — "த ஐலண்ட்" தகவலில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (க)

## திருமலையில் கப்பல்களை அழித்த "நாசகாரி" புலிகளின் கண்டுபிடிப்பு!

### வேண்டிய நேரம் நீரில் மூழ்கக்கூடியது!!

கொழும்பு, மே 15

திருகோணமலை துறைமுகத்தில் தரித்து நின்ற 'சூரயா', 'ரணசுறு' ஆகிய போர்க் கப்பல்களைத் தகர்ப்பதற்கு, விடுதலைப் புலிகள் விசேட "நாசகாரிகளை" வடிவமைத்து இருந்ததாக கடற்படையினர் நடத்திய ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளதாம்.

கண்ணாடி இழையப் படகுகள் இரண்டை சிறிய நாசகாரிகளாக கடற்புலிகள் விசேடமாக மாற்றி வடிவமைத்தனர் என்ற விவரமும் தெரிய வந்துள்ளது.

ஒரே படகே நீரில் மூழ்கிச் செல்லகூடியதாகவும் தேவைப்படும்வேளை மிதக்கக் கூடியதாகவும் கடற்புலிகள் புதிய கண்டு பிடிப்பு ஒன்றைச் செய்திருக்க வேண்டும் என்று ஆய்வு விசாரணைகள் புலப்படுத்தி இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் கப்பல் நிபுணர் ஒருவரே இந்தப் புதிய கண்டுபிடிப்பைச் செய்திருக்கிறார் என்று ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். அந்த நிபுணரின் பெயர் ஆங்கிலத்திலும், தமிழிலும் "நாசகாரி" ஒன்றில் பொறிக்கப்பட்டிருந்ததாகவும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

நாசகாரியை வடிவமைத்தவரின் பெயர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கடந்த இரு தினங்களில் மட்டும் 16 க்கும் மேற்பட்ட படையினர் பலி

யாழ்ப்பாணம், மே 15

கடந்த இரு தினங்களில் ஸ்ரீலங்கா படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம் பெற்ற மோதல்களில் 16க்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பு வாகரைப் பிரதேசத்தில் உள்ள குஞ்சன் குளம் என்னும் இடத்தில் இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டு வந்த இராணுவ அணி ஒன்றினை விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் மாலை வழி மறித்துத் தாக்கினர்.

இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் நடத்திய ஒரு மணிநேர கடும் தாக்குதலையடுத்து பலத்த இழப்புக்களுடன் இராணுவத்தினர் தமது பழைய நிலைக்கு தப்பி ஓடி விட்டனர்

இத்தாக்குதலில் 3 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், 14 பேர் படுகாயமடைந்ததாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேற்படி தாக்குதலில் மேஜர் சுமன் அல்லது சலீம் (சுறு [illegible] — மட்டக்களப்பு), கப்டன் வெளிச்சம் [வேலப்போடி ரவீந்திரன் — மட்டக்களப்பு], லெப்டினன்ட் தர்மராஜ் [அல்லது ஈசன் [முத்தன் குட்டி சபாபதி — அம்பாறை] லெப்டினன்ட் கோபிநாத் அல்லது இல்லை [கோபால பிள்ளை ராசன் — மட்டக்களப்பு], வீரவேங்கை தவநிதி [அழகையா கண்ணன் — மட்டக்களப்பு], வீரவேங்கை கலாதீன் [சுப்பிரமணியம் உமா காந்தன் — மட்டக்களப்பு], வீரவேங்கை நேசன் [நேசானந்தம் சசிகுமார் — மட்டக்களப்பு], வீரவேங்கை இசைவாணன் (யோகிதராஜா விக்கினேஸ்வரன் — மட்டக்களப்பு] ஆகிய போராளிகள் வீரமரணமடைந்தனர்.

திருகோணமலை கும்புறுப்பிட்டி காட்டுப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் நடந்த பாரிய மோதலில் ஐந்து படையினர் கொல்லப்பட்டனர் என்றும் —

ஆனையிறவு முன்னணி காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் எட்டுப் படையினர் கொல்லப்பட்டனர் 14 இராணுவத்தினர் காயமடைந்தனர் என்றும். தகவல்கள் தெரிவிக்கின்றன. [இ-க-7-5-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய எல்லையில் 'சாம்' ஏவுகணை இராணுவம் கண்டுபிடித்ததாம்!

கொழும்பு, மே 15

ரஷ்யத் தயாரிப்பான ''எஸ். ஏ - 7'' (ஸ்ரெல்லா) ரகத்தைச் சேர்ந்த ஏவுகணை ஒன்றை சர்ச்சைக்குரிய இந்திய வடமாநிலமான ஜம்மு—காஷ்மீரின் எல்லைப்புற மாவட்டமான குப்வராவில் கடந்த வருடத்தில் இந்திய இராணுவ ரோந்துப் படை ஒன்று கண்டுபிடித்ததாக புதுடில்லியைச் சேர்ந்த செய்தியாளர் எஸ். வெங்கட் நாராயணன் தகவல் வெளியிட்டிருக்கிறார்.

உக்ரைன் நாட்டிலிருந்து உத்தியோகப்பற்றற்ற வழிகளில் விமான எதிர்ப்பு ஏவுகணைகளை விடுதலைப் புலிகள் பெற்றிருக்கலாம் என சில நிபுணர்கள் கருதுகின்றனர்.

சட்டவிரோதமான ஆயுதக் கப்பல் ஒன்று ஸ்ரீலங்காவை நோக்கி வருகின்றது என சில மாதங்களுக்கு முன்னர் உக்ரைன் அரசாங்கம் ஸ்ரீலங்காவை எச்சரித்ததாக ஆரம்பக் கட்டச் செய்திகள் தெரிவித்தன.

இந்தத் துப்புக் கிடைத்ததை அடுத்து — அச்சமயம் விடுதலைப் புலிகளுடன் அமைதிப் பேச்சுக்களை நடத்திக் கொண்டிருந்த ஸ்ரீலங்கா' இந்தத் துப்பு பற்றிய தகவலை இந்தியாவுக்கு உடனடியாகத் தெரியப்படுத்தியது.

இந்த சட்டவிரோத ஆயுதங்கள், ஸ்ரீலங்காவிலும் பார்க்க இந்தியாவுக்கு எதிராகவே பயன்படுத்தப்படலாம் எனக் கருதியதாலேயே துப்புப் பற்றிய விவரத்தை இந்தியாவுக்குத் தெரிவித்து இந்தியப் பாதுகாப்பு அமைப்புகளை ஸ்ரீலங்கா உஷார்படுத்தியது.

இந்த ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கொள்வனவு செய்வதற்கு இடையில் நின்று செயற்பட்டோர், நிதி கிடைத்த விதம், ஸ்ரீலங்காவுக்குள் அது கடத்தி வரப்பட்ட வழி ஆகியவற்றைக் கண்டுபிடிப்பதில் இந்திய பாதுகாப்பு அமைப்புகள் ஆவலாக இருக்கின்றன.

வட இந்திய மாநிலங்களைச் சேர்ந்த தீவிரவாதக் குழுக்கள் — குறிப்பாக நாகலாந்து போராளிகள், பஞ்சாப் தீவிரவாதிகள் போன்றோர் — தென்கிழக்காசியாவில் உள்ள சர்வதேச ஆயுதச் சந்தைகளில் ஒப்பந்தங்களைச் செய்திருக்கின்றனர்.

எனினும் இந்தியாவில் உள்ள எந்தத் தீவிரவாத அமைப்பும் இதுவரை ''சாம்'' ஏவுகணைகளைப் பயன்படுத்தவில்லை.

ஆனால் ஜம்மு- காஷ்மீர் எல்லைப் புறத்தில் ரஷ்ய தயாரிப்பு ''எஸ். ஏ-7' ஏவுகணை ஒன்றை இந்திய ராணுவ ரோந்துப் படை கடந்த ஆண்டு ஏப்ரலில் கண்டுபிடித்தது.

—இவ்வாறு அச்செய்தியாளர் மேலும் தெரிவித்தார். (உ)

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

(1) Canon AE - I Program Still Camera. (2) Nikon FM - 2 Still Camera [3] M - 1000 வீடியோ கமரா [4] MX - 10 மிக்சர் [5] A V - 5½ மிக்சர் ஆகியன விற்பனைக்குண்டு. தொடர்பு: நீதல் வீடியோ, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம். (8535)

அழகிய சுத்தமான அல்சேஷன் நாய்க்குட்டிகள் 45 நாட்கள் நிரம்பியவை. 4½ மாதங்கள் நிரம்பிய நாய்க்குட்டி ஒன்றும் விற்பனைக்குண்டு. தொடர்பு: Dr. V. செல்லத்துரை, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (8534)

சகல துணை உறுப்புக்களுடன் புதிய ஆண்கள் சயிக்கிள், பிள்ளைத்தொட்டில், Walker, ஏணைத் தொட்டில் (Spring Set) மலிவு விலையில் விற்பனைக்கு. 213, நாவலர் வீதி, புதிய கல்வி நிலையத்திற்கு அருகில். [8539]

இனிச் சோழிக் குஞ்சுகள் (Double Colour', Hyline White) பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: க. சிவானந்தன், பழைய தபால் கந்தோர் வீதி (சிவப்பிரகாச வித்தியாசாலைக்கு முன்) சங்கானை. (8537)

ஒரு பேடி முட்டையிடும் ஹங்கேரியன் பிராமா விற்பனைக்குண்டு தொடர்பு: இல 9. 2ஆம் ஒழுங்கை பிரதான வீதி யாழ்ப்பாணம். [8541]

சாவகச்சேரி டச்றோட், 1ஆம் கட்டை ஒழுங்கையில் 5பரப்பு காணி மா, தென்னை மரங்களுடனும், நல்ல தண்ணீர் கிணறுடனும் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: எஸ் கந்தசாமி சட்டத்தரணி, சாவகச்சேரி [8538]

வட இலங்கை சங்கீத சபை பரீட்சைகளுக்குரிய சங்கீதம், நடனம் வினா - விடைகள் விற்பனையாகின்றன. ஸ்ரீசுப்பிரமணியம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [36639]

பூச்சி நீக்கப்பட்ட கறுப்பு, பிறவுண், சாம்பல், வெள்ளை நிறம் கலந்த பொமரேனியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: றோசாத் தோட்டம், தலங்காவல் பிள்ளையார் கோவிலடி, திருநெல்வேலி கிழக்கு. [36648]

### கார் விற்பனைக்கு

Japan தயாரிப்பான Mitsubishi கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 102, ஆடியபாதம் வீதி, நல்லூர். தொடர்பு: நேரம் காலை 10—12 மாலை 4—6 வரை. [36632]

### விற்பனையாகிறது

மார்க்கா நிறுவன வெளியீடுகளான பொருளாதாரக் கொள்கை, அபிவிருத்தி மாதிரிகள், சனநாயகம் என்றால் என்ன? சந்தைப் பொருளாதாரம் என்றால் என்ன? விற்பனையாகிறது பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். [சி-1365]

### VENUS ANTENNA

To View Ruppavahini, Madras Programmes. Fixing Venus Antenna Repairing Antennas, Radios T.V-Decks, Clocks and Watches Venus Dilka Watch and Radio Works 284: Stanley Road [Ariyakulam Junction] Jaffna Branch, Kandy Road, Chavakachcheri (C 1351)

### மணமகன் தேவை

வயது 21 செவ்வாய் குற்றமற்ற பெண்ணுக்கு 28 வயதுக்குட்பட்ட கனடா மணமகன் தேவை. தொடர்பு: புஸ்பா திருமண சேவை, இல 559 341 கே கே எஸ் வீதி, மனோகரா தியேட்டர் சந்தி, யாழ்ப்பாணம் [36640]

29 வயதுடைய, சைவ மேல் (?) சமய ஆசிரியைக்கு [கலைப் பட்டதாரி] அரசாங்க, தனியார்துறையில் உத்தியோகம் பார்க்கும் பொருத்தமான மணமகனைத் தேடுகின்றனர். ஆசிரியர் விரும்பத்தக்கது. உடன் தொடர்பு கொள்க: இல 792, பேர் உதயன், யாழ்ப்பாணம். (36649)

### தமிழ் கம்பியூட்டர்

தமிழில் கம்பியூட்டர் மகசீன் கணிப்பொறி மாத இதழ் விலை 40/-. வெளிவந்து விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். (சி-1370)

### வகுப்புகள்

யாழோசை இசை வகுப்புகள் A/L 96, 97 கலைப்பிரிவினருக்கான சங்கீத வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட உள்ளன. தொடர்பு: 94, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். [36634]

### தேவை

விற்பனையாளர்கள், விற்பனை உதவியாளர்கள் தேவை. நகர எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. தொடர்பு கொள்ளவும்: யாழ். நுகர்வோர் காட்சியகம், சிவன் வடக்கு வீதி, இல. 441, K. K. S. வீதி, யாழ்ப்பாணம். [36631]

### இடமாற்றம்

454, ஆஸ்பத்திரி வீதியில் இயங்கிய ஒட்டகப்புலம் முறிவு நோவு வைத்திய சாலை தற்போது இல. 50, கண்டி வீதி, கண்டிக்குளி — பழைய ஆசீர்வாத அச்சகத்தில் சனி, ஞாயிறு தவிர்ந்த நாள்களில் இயங்கும். (36598)


## இந்து மத குருமார் அடையாள அட்டை வழங்கல்

இந்து மத குருமார் ஒன்றியத்தில் அங்கத்துவம் பெறும் சகல குருமார்களுக்குமான அடையாள அட்டைகள் வழங்குவதற்காக அரைப் புகைப்படம் இரண்டும் 75 ரூபாவும் செலுத்தி பெற்றுக் கொள்ளவும்.

இங்ஙனம்
செயலாளர்,
இந்து மத குருமார் ஒன்றியம்,
யாழ். மாவட்டம்.

[சி-1202]

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



ம. கிறிசோஸ்ரம் பொன்ராசா
[கிறீ பொன்]
(பங்காளர், சிபசைசிட், வியாங்கொட)

மலர்வு: 09 — 10 - 1916 உதிர்வு: 15 — 05 — 1993

அன்பின் உருவாய், பண்பின் சிகரமாய், பாசத்தின் இருப்பிடமாய் வாழ்ந்த எம் அன்புத் தந்தையே! நீர் மறைந்து ஆண்டுகள் பல சென்றாலும் உம்மை நாம் மறவோம்.

மனைவி மக்கள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

27, சுவாட்ஸ் வீதி.
யாழ்ப்பாணம்

(36642)

## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 21 — 12 — 1943 உதிர்வு: 15 — 05 — 1994

அமரர்
அ. இம்மானுவேல் ஜெயசிங்கம்
(மதுவரி அத்தியட்சகர்)

முடிவில்லாத ஒளி இவர்மேல் பிரகாசிக்கக் கடவது, சமாதானத்தில் இளைப்பாறுவாராக.

கருணைத் தெய்வமே!

உமது கட்டளைப்படி வாழ்ந்து எம்மை விட்டுப் பிரிந்த இம்மானுவேல் ஜெயசிங்கத்திற்கு அமைதியும், ஒளியும் நிறைந்த இடத்தை அளித்து உமது புனித இல்லத்தில் என்றும் வாழச் செய்தருளும்.

இவரது பிரிவால் துயருறும்:
— குடும்பத்தினர்.

நெல்லியடி,
சரவெட்டி

(36654)

## ஈழத் தமிழர் இருவர் கைது

சென்னை, மே 15

ஆயுதக் கடத்தலில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஈழத்தமிழர்கள் இருவர் இராமநாதபுரம் மாவட்டம் பெருங்குளம் பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ராஜா, கென்னடி ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டனர் என்றும் —

புளொட் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் கியூ பிரிவு பொலிஸார் குற்றம் சாட்டியுள்ளனர். (ஐ)

### வலி. மேற்கு பிரதேச சபை

## சூழல் பாதுகாப்பு தின போட்டி விவரங்கள்

வலிகாமம் மேற்கு, மே. 15

வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தினால் சூழல் பாதுகாப்பு தினம் யூன் மாதம் 5 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளது.

சூழல் பாதுகாப்பு தினத்தையொட்டி பாடசாலை மட்டத்திலும், வெளி அமைப்புக்களின் மட்டத்திலும் கவிதை, கட்டுரை, ஓவியம், நாடகம் ஆகிய துறைகளில் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

போட்டிகளில் பங்கு பற்றும் பாடசாலை மாணவர்கள் தமது விண்ணப்பங்களை இம்மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் சங்கானை கோட்டக் கல்விப் பணிப்பாளருக்கும் வெளி அமைப்புக்களில் இருந்து பங்கு பற்றுபவர்கள் தமது விண்ணப்பங்களை இம்மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் சங்கானை பிரதேச செயலருக்கும் அனுப்பி வைக்க வேண்டும்.

15 வயதுக்கு உட்பட்டோர் ஒரு பிரிவாகவும் மேற்பட்டோர் இன்னொரு பிரிவாகவும் இரண்டு பிரிவுகளாக போட்டிகள் நடைபெறவுள்ளன. (க-12-175)

## வைத்தியசாலை வளவு திருத்தம்

தென்மராட்சி, மே 15

நோயாளர் நலன்புரிச்சங்க நடுவப் பணியகத்தினர் 50 ஆயிரம் ரூபா செலவில் சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை வளவில் வேலிகளைத் திருத்தியமைத்துள்ளனர்

இதேவேளை இவ் வைத்திய சாலையில் உள்ள சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தினை தரக் கொட்டகையாக அமைத்துள்ளனர். (க-117)

## யாழ். ஆஸ்பத்திரியில் மருந்துக் தட்டுப்பாடு

### நோயாளர்கள் அவதி

யாழ்ப்பாணம், மே15

யாழ் போதனாவைத்திய சாலையில் தற்போது ஏற்பட்டுள்ள மருந்துத் தட்டுப்பாட்டினால் குறிப்பாக வறிய நோயாளிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கும் வெளி நோயாளிகளுக்கும் மருந்துவகைகளை வெளியே வாங்கும்படி சிட்டை வழங்கப்படுகிறது.

இவற்றை வாங்கும் சக்தி இல்லாதவர்கள் இச் சிட்டைகளை வீசி எறிந்துள்ளதைக் காணக் கூடியதாக இருக்கிறது.

சாதாரண மருந்து வகைகளான பனடோல், ஒறல் பென்சிலின் மற்றும் சில அன்ரிபயொற்றிக் மருந்து வகைகளுக்குக் கூடத் தட்டுப்பாடு நிலவுவது குறிப்பிடத்தக்கது. (க-15)

## 250 குற்றவாளிகளுக்கு வெசாக்கை ஒட்டி மன்னிப்பு

கொழும்பு மே 15

வெசாக் பண்டிகையையொட்டி சிறையிலுள்ள 250 குற்றவாளிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இம் மாதம் 14 ஆம் திகதி வரை மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளுக்கு. ஆயுள் தண்டனையாக அவர்களது தண்டனை குறைக்கப்பட்டுள்ளது.

இதற்கான பணிப்புரை ஜனாதிபதியால் விடுக்கப்பட்டுள்ளது. (ஒ-5)

## புல்மோட்டையில் ஹர்த்தால்

மட்டக்களப்பு, மே. 15

இராணுவத்தினரின் பூரண கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் அப்துல் மனாப் என்பவர் சுடுக்கொல்லப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக கடந்த 4 ஆம் திகதி புல்மோட்டையில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. (க)

## குழாய் முறை மல, சல கூடம்

வல்வெட்டித்துறை, மே 15

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் உள்ள அனைத்து வாளிமுறையிலான மலசல கூடங்களும் குழாய் முறைக்கு மாறி மலசல கூடங்களாக மாறறப்பட உள்ளன.

இதற்கான 8 லட்சம் ரூபா நிதி சுகாதாரப் பகுதி நிதி ஒதுக்கீட்டிலிருந்து வழங்கப்பட்டுள்ளது

மலசலகூடங்களின் அமைப்புவேலைகள் துரிதமாக ஆரம்பித்து நடைபெறுகின்றன. (க-155)

## சிங்களப் பத்திரிகைகளை கண்டிக்கிறார் விக்டர் ஐவன்

கொழும்பு, மே 15

நாட்டின் இன்றைய துரதிர்ஷ்டவசமான நிலைமைக்கு தொடர்பு சாதனங்களும் பொறுப்பேற்க வேண்டும். இது எனது தனிப்பட்ட கருத்தாகும்.

''ராவய'' பத்திரிகையின் பிரதம ஆசிரியர் விக்டர் ஐவன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்பு சாதனங்கள் எப்போதும் ஒருதலைப்பட்சமாக செய்திகளை வெளியிட்டும். ஆய்வுகளைச் செய்தும் வந்துள்ளன.

தேசியப் பத்திரிகைகள் எனக் கூறிக்கொள்ளும் சிங்களப் பத்திரிகைகள் யுத்தம் உடனடியாக செய்யப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டுள்ளனவாகும். கடந்த 12 ஆண்டுகளாக நடத்தப்பட்ட யுத்தத்தில் விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க முடியாமற் போனதற்கான காரணங்கள் குறித்து இப்பத்திரிகைகள் ஆய்வு செய்யவோ. செய்திகளைப் பிரசுரிக்கவோ இல்லை.

யுத்தம் வேண்டும் என்று கூறும் பத்திரிகைகள் அதன் விளைவுகள் பற்றி பரிசீலனை செய்ய முயற்சிக்கவில்லை.

— இவ்வாறு விக்டர் ஐவன் மேலும் தெரிவித்தார். (ஐ-6)

## தமிழ் விழாவும் நூல் வெளியீடும்

பாவலன் சத்தியசீலனின் தமிழ் விழாவும், நூல் வெளியீட்டு விழாவும் இன்று திங்கட்கிழமை மாலை 3 30 மணிக்கு நவாலி வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நடைபெறும்.

ஓ எல் ஆர். பாடசாலை அதிபர் திரு சி. தார்சிசியஸ் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் கவிஞர் சத்தியசீலனின் இருபது நூல்களுக்கு ஓவியம் வரைந்த பிரபல ஓவியர் நமணி ஓவியர் பிரதிபா கலைமாமணி க. இராசரத்தினம் அவர்களால் கொண்டாடப் போர்த்திக் கௌரவிக்கப்படுவார்.

விழாவின் போது கவிஞரின் 'ஐஸ்கிறீம் ஐஸ்கிறீம்', 'அணிலாரே' 'பாலகன்', 'அமிழ்தன்' ஆகிய நூல்கள் வெளியிட்டு வைக்கப்படும்.

யாழ். பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ சண்முகதாஸ் உட்பட பல அதிபர்கள். ஆசிரியர்கள் உரையாற்றுவர்.

காலையில் ஓவியக் கண்காட்சியும். கவிஞரின் நூற்கண் காட்சியும் நடைபெறும்.

# தமிழ்மொழியில் சிசு நிலையிலுள்ள அறிவுத் துறை வளர வேண்டும்

## யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம் மே 15

''தமிழை இலக்கியங்களின் ஊடாக வளர்ப்பதுடன் மட்டும் நின்றுவிடாது அறிவுத்துறையும் வளர்க்கப்பட வேண்டும் எமது மொழி அறிவுத் துறையைப் பொறுத்தவரை இன்னமும் சிசுவாகவே உள்ளது கணணியுகமாக உள்ள இக் காலத்தில் தவர்ச்சி அடைந்த இனமாக நாம் இருக்கக் கூடாது ''

அகில இலங்கை கம்பன் கழகத்தின் பதினைந்தாவது ஆண்டு நிறைவாக கம்பன் விழாவின் முதல் நாள் நிகழ்ச்சியில் தலைமை வகித்துப் பேசிய யாழ் பல்கலைக் கழகத் துணை வேந்தர் பேராசிரியர் க. குணரத்தினம் இவ்வாறு கூறினார்.

அகில இலங்கை கம்பன் கழகத்தின் கம்பன் விழா நல்லூர் கந்தசுவாமி கோவில் வடக்கு வீதியில் அமைக்கப்பட்ட விழாப்பந்தலில் நடைபெற்றது துணை வேந்தர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

தமிழில் விஞ்ஞானச் சொற்களை ஏற்படுத்தக்கூடியதாக கம்பன் கழகம் போன்ற அமைப்புகள் உருவாக வேண்டும்.

அழிவும் துன்பமும் நிறைந்த சூழலில் மக்களிடையே தமிழையும் இலக்கியத்தையும் வளர்த்து வரும் கம்பன் கழகம் சமுதாயப் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு எமது இனம் உயரத் தொண்டாற்றும் பெரியோர்களை கௌரவிக்கவும் விருதுகளை வழங்கவும் முன்வந்திருப்பதன் மூலம் இலக்கியத்தையும் தமிழையும் சமூகத்தையும் வளப்படுத்தும் நோக்கத்தில் வெற்றி கண்டுள்ளது தெரிகிறது.

மரையாழ் விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட வைத்திய கலாநிதி ஜெயகுலராஜா மற்றும் கௌரவம் பெறும் மூதறிஞர்களின் பணிகளுக்காக வழங்கப்பட்ட இந்த விருதுகள் எமது பண்பாட்டு அச்சத்தை எடுத்துக் காட்டுகின்றன என்று கூறினார்.

மரையாழ் விருது பெற்ற வைத்திய கலாநிதி து. வி. ஜெயக்குலராஜா பேசும் போது கூறியதாவது:

தமிழினம் நிச்சயமாக விடுதலை பெறும். விடுதலை பெற்ற நாட்டில் நமது இனம் நிறைவு பெற்ற முழுமையான இனமாக வாழ வேண்டும். இதற்கு அறிவியலுடன் அன்பும் பண்பும் நிறைந்தவர்களாக இளைஞர்கள் வாழப் பழக வேண்டும். இலக்கியம், பண்பாடு. கலாசாரம் அனைத்தும் பேணப்பட வேண்டும். அது நீதியான தேவை. நாகரிகம் என்ற போர்வைகளில் இருந்து விலகி ஒருவனில் ஒருவன் அன்பு நிறைந்த சிறிய கிராமத்தில் (திருக்கோவிலூர்) சாதாரண குடும்பத்தில் பிறந்தவன் நான். எனது பெற்றோர்களினதும் மனித நேயம் மிக்க எமது கிராமத்தவர்களினதும் நெறிப்படுத்தலில் வளர்ந்தவன் நான்.—என்றுகூறினார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள், யாழ். ஆயர் அதி வண. தோமஸ் சௌந்தரநாயகம், தென்னிந்திய திருச்சபைப் பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன், கம்பன்கழக அமைப்பாளர் இ ஜெயராஜ். சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோரும் பேசினார்கள். [க-111]


## நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்

# A/L 97

தூய கணிதம்
பிரயோககணிதம் ) திரு கமலசிங்கம்

ஆரம்பம்: இன்று (15-05-95) [பி. ப. 4மணி]

(சி/1208)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
நெடுந்தீவுப் பிரிவு
நடத்தும்

## குமுதினிப் படகில் பலியான பொது மக்கள்

## 10 ஆம் ஆண்டு நினைவுநாள் நிகழ்வு 1995

இடம்:- சென். ஜோன்ஸ் கல்லூரி
(பிரதான வீதி, கண்டிக்குளி, யாழ்ப்பாணம்)

காலம்:- இன்று (1995-05-15)
திங்கட்கிழமை பி. ப. 2-30 மணிக்கு

தலைமை: திரு. வ. ஐ. ந பத்மகுமார்
(தலைவர், நெடுந்தீவுப் பிரிவு, இ.செ.சி. சங்கம்)

நிகழ்ச்சி நிரல்

★ தீபம் ஏற்றல்: குமுதினிப் படகில் பலியானோர் நினைவாக (பெற்றோர், உறவினர்)
★ மலரஞ்சலி: நெடுந்தீவுப் பிரிவு போஷகர்கள்
★ மெளன அஞ்சலி:
★ வரவேற்புரை: திரு. வே. சுந்தரலிங்கம் (உப தலைவர், நெடுந்தீவுப் பிரிவு இ.செ.சி. சங்கம்)
★ தலைமையுரை: திரு. வ. ஐ. ந. பத்மகுமார்
★ ஆசியுரை: சிவஸ்ரீ.இ. சிவராமலிங்கக்குருக்கள்
வண பிதா ஆர்.எச். சகாயநாதன் அடிகள்
★ நினைவஞ்சலி உரைகள்:
வைத்திய கலாநிதி த. சிங்கராஜா (தலைவர், இ.செ.சி.சங்கம் யாழ். கிளை)
பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம் (செயலாளர், இ.செ.சி.சங்கம் யாழ். கிளை)
திரு. கோ. தியாகராஜா (பொருளாளர், இ.செ.சி.சங்கம்) யாழ். கிளை)
திரு. கே. பாலகிருஷ்ணன் (உப தலைவர், இ.செ.சி.சங்கம் யாழ். கிளை)
திரு. வை. சிறிபதிமநாதன் (உதவி பிராந்திய முகாமையாளர்)
திரு. நா. இராமச்சந்திரன் (பிரதம எழுதுவினைஞர், அரசாங்க அதிபர் பணிமனை)
திரு. இ. சு. நடராசா (ஓய்வுபெற்ற அதிபர், ஆசிரியர் பயிற்சி கலாசாலை, பலாலி)
திரு. க. கனகரத்தினம் (மொழிபெயர்ப்பாளர், யாழ். பல்கலைக்கழகம்)
★ பேட்டி காணல்;
பேட்டி காண்பவர் திரு.எம்.எஸ்,ஏ. ஒஸ்வோல்ட் (ஆசிரியர்)
பேட்டியளிப்பவர் திரு.கா. சாந்தலிங்கம்
★ இசையமுதம்; நெஞ்சக்கனல்
செல்வி ச, லவுடாசெறிஸ்
திரு. அ. யூட்மரியசீலன்
செல்வி அ. றாபி — ஓகன்
செல்வன் சு. செந்தூரன் — தபேலா
★ கவியரங்கம்:
தலைப்பு: "உணர்வுகளின் ஊற்றுக்கள்"
தலைமை: பண்டிதர் வித்துவான் கவிமாமணி க. த. ஞானப்பிரகாசம்
கவிஞர் நா. இலட்சுமணராஜா
" க. ஆலூர் குமரன்
" சி. சதீஸ்வரராஜா (மாணவன்)
" செல்வி அ. அமலராஜேஸ்வரி
" செல்வி ப. மென்ரெசா
" கு. ஜெயப்பிரகாசன்
வில்லுப்பாட்டு
தலைப்பு: "குமுதினியாள் குமுறுகிறாள்"
தலைமை: செ. மகேசு (முதன்மை ஆசிரியர்)
பங்குபற்றுவோர்:
திரு. வே. சுந்தரலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்)
திரு. எம்.எஸ்.ஏ ஒஸ்வோல்ட் (ஆசிரியர்)
திரு. இ. ஜெயசிங்கம் (சட்டத்தரணி)
திரு. சு. குமாரசுவாமி (ஓய்வுபெற்ற அதிபர்)
திரு. அ. இ. ஜெயரட்ணம் — ஆர்மோனியம்
★ நன்றியுரை: திரு. சி. கேதீஸ்வரராசா (செயலாளர், நெடுந்தீவுப் பிரிவு)
நிகழ்ச்சி அமைப்பாளர்
திரு. ச. பேரின்பநாதன் (பொருளாளர், நெடுந்தீவுப் பிரிவு)

விளம்பர அன்பளிப்பு:
வே. குமரகுருபரசுந்தரம்
[36652]



சேர், வை, துரைசுவாமி ம.ம. வித்தியாலயம்
வேலணை

## பழைய மாணவர் சங்கம்

## பொதுக் கூட்டம்

காலம்: 28-05-1995 ஞாயிறு காலை 9.30 மணி
இடம்: வித்தியாலய மண்டபம் (70/2 அரசடி வீதி யாழ்.)

சங்கத்தின் புதிய யாப்பு பரிசீலிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட விருப்பதால் பழைய மாணவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறும், இதுவரை உறுப்புரிமை பெற்றுக் கொள்ளாதவர்கள் பொதுக்கூட்டத்திற்கு முன்னதாக உறுப்புரிமையைப் பெற்றுக்கொள்ளும் படியும் அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

சு. கலாதரன் — தலைவர்
கா. பாலகிருஷ்ணன் — செயலாளர்
(36653)


# 37 பேரை அனுமதிப்பதில் தற்போதைய மாணவரின் கல்வி பயிலும் காலம் கூடும் என்பது தவறு!

## முன்னாள் மருத்துவ பீடாதிபதி பாலசுப்பிரமணியம் வெளியிடும் தகவல்

தனியார் மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கு யாழ். மருத்துவ பீடத்தில் இடமளிப்பதால் தாம் பாதிக்கப்படுவோம் என்று யாழ். மருத்துவ பீட மாணவர்கள் கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

இவர்களை அனுமதிப்பதால் தமக்குரிய — கல்வி பயிலும் காலம் அதிகரிக்கும் என்று மருத்துவ மாணவர்கள் கூறுவதை ஏற்கமுடியாது; பரீட்சைகள் பின்போடப்படலாம் என்று கூறுவதற்கும் சாத்தியமில்லை. இவர்களுக்கான பரீட்சைகள் செய்முறைகள் என்பன மாணவர்கள் மருத்துவ பீடத்துக்கு அனுமதிக்கப்படும் போ 3 த அட்டவணைப் படுத்தப்பட்டிருக்கும். அதில் எந்த வித மாற்றமும் இருக்காது.

அந்த அட்டவணைப் படியே பரீட்சைகளும், செய்முறை வகுப்புகளும் நடைபெறும்.

மாணவர்கள் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு மாணவர் குழுக்கள் அதிகரிப்பதனால் பரீட்சை வைக்கப்பட வேண்டிய காலம் பின் தள்ளப்படமாட்டாது.

செய்முறைக் குழுக்களின் எண்ணிக்கை அதிகரிப்பினும் செய்முறைகள் சம அளவிலேயே நடத்தப்படும்.

கற்பிப்பதற்கு ஆட்கள் பற்றாக்குறை உள்ள காரணத்தினால் —

மாணவர்களை அதிகமாக எடுக்கும் போது தாம் திறமையாகச் செய்ய முடியுமா என்ற பயம் மாணவர்களிடம் இருக்கலாம்.

இதற்கேற்ற வகையில் மாற்றுத் திட்டம் ஒன்றை மாணவர்களுக்கு வழங்கி அவர்களை பாதிக்காமல் தனியார் மருத்துவக் கல்லூரி மாணவர்களை சேர்த்துக் கொள்ள முடியும்.

இந்த மருத்துவ பீடத்திற்கு எத்தனையோ வசதிக் குறைவுகள் உள்ளன.

ஆனால் இங்கு கற்று வெளியேறும் மாணவர்களின் தரம் குறைவடையவில்லை.

இங்கு ஆசிரிய பற்றாக்குறை நிலவுகின்றது.

மாணவர்கள் அந்தக் குறைகளையும் நிவர்த்தி செய்கின்றார்கள்.

இங்கு தற்போது நிலவும் சூழ்நிலையில் கற்பதால் மாணவர்கள் வலுவடைகிறார்கள்.

வேறு மருத்துவபீடங்களை விட்டு வெளியேறும் மருத்துவர்களை விட இங்கிருந்து வெளியேறும் மருத்துவர்கள் எந்த ஒரு சூழ்நிலையையும் எதிர்கொள்ளக் கூடியவர்களாக உள்ளனர். ஆகவே கஷ்டங்கள் மாணவர்களைப் பாதிக்காது.

மாணவர்கள் எண்ணிக்கை அதிகரித்து குழுக்கள் கூடுவதால் மாணவர்கள் பாதிக்கப் பட மாட்டார்கள்.

மாணவர்களை கூடுதலான காலம் வைத்திருக்கவேண்டும் என்பது யாருடைய எண்ணமும் அல்ல.

பணம் செலுத்தி கல்வி கற்பவர் என்றாலும் பணம் செலுத்தாமல் கல்வி கற்பவர் என்றாலும் இரு தரப்பினரும் தமக்குரிய அடிப்படைத் தகைமைகளை பெற்றிருந்தால் மட்டுமே பட்டம்பெற்று வெளியேற முடியும்.

இன்றைய தர நிர்ணயத்தை முன்னைய தர நிர்ணயதுடன் ஒப்பிட முடியாது. வட இலங்கை மருத்துவக் கல்லூரி மாணவர்கள் அன்றைய தர நிர்ணயத்தின்படி தமது அடிப்படைத் தகைமையைப் பூர்த்திசெய்தே உள்ளனர்.

அடிப்படைத் தகைமை குறிப்பிட்ட புள்ளிகளைப் பெற்றவர்கள் அடிப்படைத் தகைமை உடையவர்களாகக் கணிக்கப்படுவர்.

அடிப்படைத் தகுதிக்குரிய குறித்த புள்ளிகளைப் பெற்று, பின்தங்கிய மாவட்டங்களிலிருந்து மாவட்ட அடிப்படையில் மருத்துவ பீடத்துக்கு மாணவர்கள் அனுமதிக்கப் படும்போது, அதே புள்ளியைப் பெற்ற மாணவர்கள், தனியார் மருத்துவக் கல்லூரியில் இணையக்கூடாது என்பது எந்தவகையிலும் நியாயம் ஆகாது.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவே இந்த 37 மாணவர்களுக்குமுரிய இரண்டாவது எம்.பி.பி.எஸ். பரீட்சையை நடத்தி தகுதியானவர்கள் என இவர்களை அங்கீகரித்துள்ளது.

யாழ். மருத்துவ மாணவர்களைப் பாதிக்காத வகையில் வட இலங்கை மருத்துவ மாணவர்களை யாழ். மருத்துவபீடத்துக்கு அனுமதிப்பதை வரவேற்கவேண்டும்.

ஆனால் எழுத்துமூல உறுதி மொழியை கேட்பது முறையானதல்ல. ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமிடையே நம்பிக்கை நிலவவேண்டும்.

உறுதி மொழிகளை எவ்வளவு தூரம் நிறைவேற்ற முடியும் என்பது நாட்டின் நிலைமையைப் பொறுத்ததே.

**பெருமை தரும் விடயம்**

இதுவரை காலமும் மூடப்படாமல் இயங்கிக்கொண்டிருப்பது எமது பல்கலைக்கழகம் மட்டுமே. இது எமக்கு பெருமை தருவதாகும்.

முதலில் ஆசிரியரின் உறுதி மொழியை மாணவர்கள் நம்ப வேண்டும். எந்த ஓர் ஆசிரியரும் மாணவனுக்கு தீங்கிழைக்க நினைக்கமாட்டார். பெற்றோர்களின் வாக்குறுதிகளைக் கேட்டு பிள்ளைகள் நடப்பது போன்று மாணவர்கள் ஆசிரியரிடமிருந்து வாக்குறுதிகளைப் பெற்றுச் செயற்பட வேண்டும்.

மருத்துவ மாணவர்களைப் பாதிக்காத வகையில் வட இலங்கை மருத்துவ மாணவர்கள் யாழ். மருத்துவ பீடத்துக்கு அனுமதிக்கப்படுவதை மருத்துவ மாணவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இதற்கான நடவடிக்கைகளை காலந்தாழ்த்தாது உடனடியாகவே மேற்கொள்ள வேண்டும்.

— யாழ். மருத்துவ பீடத்தின் முன்னாள் பீடாதிபதி போராசிரியர் எஸ். பாலசுப்பிரமணியம் மருத்துவ பீட மாணவர் பிரச்சினை குறித்து கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். ★

## நிறுத்தல் அளவைகளுக்கு முத்திரையிடல்

யாழ்ப்பாணம், மே 15

கோப்பாய் பிரதேச செயலகத்தில் வைத்து நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிமுதல் நிறுத்தல் அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (௬-30-4)

## இடம் பெயர்ந்தோருக்கான உலர் உணவு விநியோகம்

### நாளை முதல் வழங்கப்படும்

யாழ்ப்பாணம், மே 15

இடம்பெயர்ந்தோருக்கான ஒரு மாதத்துக்குரிய உலர் உணவு நாளை முதல் ப.ல.நோ.கூ. சங்கங்கள் மூலம் வழங்கப்பட வுள்ளது. பொருள்கள் கப்பல் மூலம் வந்து சேர்ந்ததை அடுத்தே நிவாரணத்தை வழங்க செயலக புனர்வாழ்வு பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது. அரிசி, மா, சீனி, பருப்பு, லக்ஸ்பிறே ஆகியன வழங்கப் படவிருக்கின்றன.

உலர் உணவு முத்திரைகள் இல்லாத போதும் உலர் உணவு முத்திரை அடிக்கட்டையில் பதிந்து வழங்க ஏற்பாடாகியுள்ளது.

கடந்த சில வாரங்களாக உலர் உணவு நிவாரணம் நிறுத்தப் பட்டிருந்தது தெரிந்ததே. (இ-3)


தமிழ் சோதிடர் ஆய்வு ஒன்றியம்
யாழ்ப்பாணம்

## விசேட அறிவித்தல்

தமிழ் சோதிடர் ஆய்வு ஒன்றியம் தனது பொதுச் சபையைக் கூட்டி, முக்கிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருப்பதால் அதுவரை ஒன்றியத்தால் நடத்தப்பட்டு வரும் பயிலரங்கு கருத்தரங்குகளை தற்காலிகமாக நிறுத்திவைப்பதென 01-04-95 இல் கூடிய நிர்வாகசபை முடிவெடுத்துள்ளது.

இம்முடிவை இவ் ஒன்றியத்தின் தலைவர் ஐயம்பிள்ளை வைத்தியநாதர் உதாசீனம் செய்யும் வகையில் செயல்பட்டு வருவதால் அவரை தலைவர் பதவியில் இருந்து நீக்குவதென 06-05-95 இல் கூடிய நிர்வாகசபை ஏகமனதாக தீர்மானித்துள்ளது.

எனவே, ஒன்றியத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவும், பொதுச்சபைக் கூட்டமும், 10-06-95 சனிக்கிழமை மாலை 4-00 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

ஐயா. சச்சிதானந்தம்,
(செயலாளர்)
நிர்வாக சபையின் பணிப்பின்படி
14-05-95
[36637]


## வலைப்பந்து இறுதிப் போட்டி

யாழ்ப்பாணம், மே 15

யாழ். மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக் குழு நடத்தும் வலைப்பந்துச் சுற்றுப் போட்டி இறுதிப் போட்டிகள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2-30 மணிமுதல் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

யாழ். கல்வித் திணைக்கள வலயம் 1இன் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் வேம்படி மகளிர் கல்லூரி ஓய்வுபெற்ற அதிபர் செல்வி இ. இராஜரட்ணம் முதன்மை விருந்தினராகவும், யாழ். மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் செல்வி சு. தணிகைச்செல்வி சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வார்கள்.

இறுதிப் போட்டியில் 17வயதுப் பிரிவில் கப்டன் வானதி நினைவு வெற்றிக் கேடயத்திற்காக உடுவில் மகளிர் கல்லூரியும், வட இந்து மகளிர் கல்லூரியும்— 19 வயதுப் பிரிவில் மேஜர் பாரதி வெற்றிக் கேடயத்திற்காக சண்டிலிப்பாய் இந்து ம.வியும், மெதடிஸ்த மகளிர் கல்லூரியும் மோதும். [நி-க]


## அறிவித்தல்

"மாதாந்த கருத்தரங்கு தொடர்பில். 15-05-95 முற்பகல் 11-00மணிக்கு 572, மருத்துவ மனை வீதியில் அமைந்துள்ள கூட்டுறவு அலுவலகத்தில் பிரதேச சபைகளின் சித்த ஆயுர்வேத வைத்திய கலாநிதிகள், நிர்வாக உத்தியோகத்தர்கள், சித்த வைத்தியக் கூட்டுறவுச் சங்க நிர்வாகிகள், மருந்துக் கலவையாளர்கள், தொண்டர்கள் மத்தியில் வடகிழக்கு கூட்டுறவு ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா அவர்களது சமுகத்தில் கலந்தாலோசனை நடைபெறும். தயவு செய்து சமுகம் தந்து உதவவும்"

தலைவர்,
சித்த வைத்திய கூட்டுறவுச்சங்கம்.
திகதி: 1995-05-15 யாழ்ப்பாணம்.
(சி/1215)



உ

## தசாக கிரகயக்கு அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் யுவ வருடம் சித்திரை மீ 24ஆம் நாள் (07-05-1995) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவரும், கலுவம் சிவாலய பிரதம குருவுமாகிய

பிரம்மஸ்ரீ
அப்பாசாமிக் குருக்கள் சிவசாமிக் குருக்கள்
அவர்களின் தசாகாதி கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

வைகாசி 2உ (16-05-95) செவ்வாய் தசாகம் காலை 10-00 மணி
வைகாசி 3உ (17-05-95) புதன் ஏகோதிஷ்டம், மாசிகம்
வைகாசி 4உ (18-05-95) வியாழன் சபிண்டீகரணம்
வைகாசி 5உ (19-05-95) வெள்ளி கிரகயக்ஞம்

இக் கிரியைகளில் தாங்களும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்,
மனைவி, மக்கள், மருமக்கள்.
செல்லப்பிள்ளையார் கோவிலடி,
சந்திரபுரம் மட்டுவில், சாவகச்சேரி.
[36650]



## கண்டீர்களா?

நன்கு வளர்ந்த, கறுப்பும், சாம்பலும் கலந்த நிறமும், கழுத்தில் பட்டியும் கட்டிய அல்சேசன் நாய் ஒன்றை 13-05-95 இரவு தொடக்கம் காணவில்லை. தகவல் தரவும், சன்மானம் தரப்படும்.

முருகன் ஸ்ரோர்ஸ்
நல்லூர் கோவில் முன்,
நல்லூர்
(சி/1218)



ROTARACT CLUB

யாழ். றோட்டறக்ற் கழகத்தின் சேவையின்

## 5 ஆவது அகவை நிறைவு விழா

இடம்:- சுண்டுக்குழி மகளிர் கல்லூரி
காலம்:- 15.05.95 [இன்று]
நேரம்:- பி. ப. 2.45 மணி

**நிகழ்வுகள்:-**

★ மங்கள விளக்கேற்றல்
★ மௌன அஞ்சலி
★ தமிழ்த்தாய் வாழ்த்து
★ வரவேற்புரை
★ தலைமையுரை
★ கடந்த கால செயற்திட்ட அறிக்கை
★ சிறப்பு விருந்தினர்கள் உரை
திரு. செ. பத்மநாதன் [திட்டமிடல் பணிப்பாளர்]
திரு. செந்தமிழன் [யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர்]
★ பிரதம விருந்தினர் உரை
Rtn. E. சரவணபவன் (தலைவர், யாழ். றோட்டறிக் கழகம்)
★ செயற்திட்டங்கள்
I) பொம்மைவெளி சிறுவர் போசாக்கு பராமரிப்பு பூங்கா சிறுவருக்கு விளையாட்டு உபகரணம் வழங்கல்.
II) பார்வையிழந்த இரு மாணவரின் கல்விக்கான நிதியுதவி வழங்கல்.
III) வறுமையிலுள்ள 15 குடும்பங்களுக்கு கயிறு திரிக்கும் இயந்திரம் வழங்கல்.
★ சஞ்சிகை வெளியீடும், கௌரவிப்பும்.
★ நடந்து முடிந்த நாடகப் பயிற்சிக்கள, நாடகப் போட்டிக்கான பரிசில்கள் வழங்கல்.
★ கலை நிகழ்வு

அனைத்து றோட்டறி, றோட்டறக்ற், இன்ரறக்ற் கழக அங்கத்தவர்களையும், நலன் விரும்பிகளையும் அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ். றோட்டறக்ற் கழகத்தினர்

அன்பளிப்பு:-



S·M·FERNANDO
[சி/1219]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## புலிகளின் குரல் வானொலியில்

15 — 05 — 1995
திங்கள் இரவு
★ 8-02 — தளிர்கள் சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
★ 8-20 — சமகாலப் பார்வை
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — தரிசனம் விளையாட்டுத்துறை பயிற்றுவிப்பாளரும், விளையாட்டு வீரருமான டேவிட் தம்பிராஜாவுடனான செவ்வி

16 — 05 — 1995
செவ்வாய் காலை
★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 — இன்றைய தாரகை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — தாயகப் பாடல்கள்

## தமிழீழ வானொலியில்

திங்கள் மாலை
★ 5-01 — சிந்தனைச் சிதறல்
★ 5-03 — எழுச்சிகீதம்
★ 5-10 புதியவை
★ 5-15 — ஆழியமுதம்
★ 5-30 — மாணவர் பக்கம்
★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
★ 6-02 — நேயர் நெஞ்சம்
★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
★ 6-25 — என்தெரிவு

# ஐ. தே. கவின் கொலைப்படைகள் குறித்து விசாரணை நடத்துக

## சர்வதேச மன்னிப்புச்சபை கோரிக்கை

கொழும்பு, மே. 15

கொலைப்படைகள் என்ற பெயரில் இயங்கிய குழுக்களுக்கும் முன்னைய ஐ. தே. க. அரசுக்கும் இடையிலான தொடர்புகள் குறித்து விசாரணை செய்யப்பட வேண்டும்.

"இலங்கை நிலைவரம் தொடர்பாக சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்ட ஓர் அறிக்கையில் இவ்வாறு கோரப்பட்டிருக்கிறது.

"இலங்கையில் உண்மைக்கும் நீதிக்குமான தருணம்" என்ற தலைப்பில் வெளியான அந்த அறிக்கையில் கொலைப் படைகளின் நடவடிக்கைகள் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணாமற் போனோர் பற்றி விசாரணைகள் மேற்கொண்டு வரும் மூன்று விசாரணைக்குழுக்கள் பற்றி சர்வதேச மன்னிப்புச் சபை தனது கருத்துக்களை அதில் தெரிவித்துள்ளது.

சட்டத்தில் இருந்து விலக்களிக்கும் சட்டத்தை அரசு முற்றாக நீக்கி விட வேண்டும். இதன் மூலம் மனித உரிமை மீறல்களில் எப்போது ஈடுபட்டிருந்தாலும் குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டே ஆவார்கள் என்பதை உறுதி செய்ய முடியும்.

விசாரணைகளில் குற்றவாளிகளாக காணப்படுவோருக்கு மரணதண்டனை அல்லாத தண்டனைகள் வழங்கப்பட வேண்டும்.

ஆட்கள் காணாமற் போன சம்பவங்கள் நிகழ்ந்த பகுதிகளில், குற்றங்களுடன் தொடர்பு கொண்டோரெனச் சந்தேகிக்கப்படுவோர் தொடர்ந்தும் அரச உத்தியோகங்களில் இருந்து வருகின்றனர்.

அவர்கள் இவ் விசாரணைகளுக்கு குந்தகம் விளைவிக்கக் கூடிய சாத்தியங்கள் உள்ளன.

மேலும் காணாமல் போனோர் பற்றி தகவல் தெரிந்தோர் விசாரணைக் குழுக்கள் முன் சாட்சியமளிக்க தயங்கலாம்.

எனவே பாரதூரமான மனித உரிமைகள் மீறல் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என நம்பப்படுவோர் விசாரணைகள் முடியும் வரை உத்தியோக பூர்வ கடமைகளில் இருந்து இடைநிறுத்தி வைக்கப்பட வேண்டும்.

காணாமற் போவோர் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபை சாசனத்திலும் இது வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த அதிகாரம் ஆணைக் குழுக்களுக்கு வழங்கப்படுவதோடு—

விசாரணைகளோடு சம்பந்தப்படும் சாட்சியங்கள், சட்டத்தரணிகள், விசாரணைக் குழு உறுப்பினர்களுக்கு பயமுறுத்தல்களிலிருந்து விலக்கு அளிக்கும் வகையில் அவர்களது பாதுகாப்பும் உறுதி செய்யப்படவேண்டும்.

பாதுகாப்பு படையினரிடம் உள்ள விசாரணைக்கு உதவக் கூடிய ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பெற்றுக் கொள்ளும் வசதிகள், மற்றும் மருத்துவ, சட்ட பதிவுகள், நீதிமன்ற சேர்ப்புகள் என்பன ஆணைக்குழுவுக்கு தரப்பட வேண்டும்.

சிலர் திடீரெனக் காணாமல் போய் பின்னர் தடுப்பு முகாம்களில் இருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளனர்.

காணாமல் போவோருடன் தொடர்புபட்டவர்களின் செயற்பாடுகள் எவ்வாறு அமைந்திருந்தன என்பதை கண்டறிவதற்கு சிறிது காலம் மட்டுமே காணாமல் போனவர்களின் சாட்சியங்க உதவலாம்

விசாரணைகள் தொடர்பான ஆணைக் குழுக்களின் சிபார்சுகள் நடைமுறைப்படுத்தப்படுவதை கண்காணிக்கும் வகையில் சுதந்திரமான அமைப்பு ஒன்று தோற்றுவிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

அரச சாராத வேறு அமைப்புகளும், ஆட்கள் காணாமற் போவதற்கு காரணமாக அமைந்துள்ளன.

இவற்றைப் பற்றி ஆராயும் அதிகாரம் ஆணைக் குழுக்களுக்கு உண்டா என்பதில் தெளிவு இல்லை.

விசாரணைகளின் போது தடய அறிவியல் துறையினரின் உதவியை ஆணைக் குழுக்கள் பெற்றுக் கொள்ள வேண்டும்.

வெளிநாடுகளில் இடம் பெற்ற இத்தகைய விசாரணைகளின் போது 'தடய அறிவியல் துறையினர்' பெரும் பங்கு ஆற்றியுள்ளனர்.

1991 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட காணாமற் போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழுவின் அறிக்கை பகிரங்கப்படுத்தப்பட வேண்டும்.

— இவ்வாறு அந்த நீண்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ-14)

# மாணவர் அறிவியல் கழக அறிவியல் வகுப்புகள்

யாழ்ப்பாணம், மே 15

மாணவர் அறிவியல் கழகம் வாராந்தம் நடத்திவரும் அறிவியல் வகுப்புக்களின் தொடரில் இவ்வாரம் நடைபெறவுள்ள வகுப்புக்களின் விவரம் வருமாறு:-

திங்கள்

★ பி. ப 3.00 மணி— 4 00 மணி ஆண்டு10 விஞ்ஞான செயல்முறை வகுப்பு—சிலமூலகங்களின் இரசாயனஇயல்புகளை அறிதல்

★ பி. ப. 4-00மணி—5 00 மணி ஆண்டு10, 11 கேத்திர கணித செயல்முறை வகுப்பு "பரப்பளவு தொடர்பான அமைப்பு"

செவ்வாய்

★ பி. ப.3.00மணி—4 30 மணி ஆண்டு8 கேத்திரகணித செயல்முறை வகுப்பு "சமாந்தரம்"

புதன்

★ பி. ப. 3.00மணி—4.00 மணி உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல்

★ பி. ப. 4மணி— 5. 00 மணி அறிவியல் ஒளிப்படக் காட்சி

★ 5 00மணி— 6 00 மணி ஆராய்ச்சியின் அடிப்படைகள் தலைப்பிலான "சக்தி" பெறப்படும் வகைகள் பற்றிய வகுப்பு

வியாழன்

★ பி. ப. 3-00 மணி—4-00 மணி ஆண்டு 8 விஞ்ஞான செயன்முறை வகுப்பு வில்லைகளை இனம் காணலும் ஒளிமுறிவும்.

★ பி. ப. 3-00 மணி 4-00 மணி ஆண்டு 10, 11 கேத்திர கணித வினா-விடை வகுப்பு

வெள்ளி

★ பி. ப 3-00 மணி 4-00 மணி ஆண்டு 11 விஞ்ஞான செயல்முறை வகுப்பு நரம்புத் தொகுதி செய்முறையுடன் கூடிய மீட்டல்

சனி

★ மு. ப 10-00 மணியிலிருந்து ஆண்டு 9 கேத்திர கணித செயன்முறை வகுப்பு "பல்கோணி ஒன்றின் கோணங்களின் கூட்டுத்தொகை"

★ பி. ப 3-00 மணி—5-00 மணி ஆண்டு 9 விஞ்ஞான செயன்முறை வகுப்பு- 'மண்'

## சங்கீதக் கருத்தரங்கு

உயர்தர மாணவர்கள் கர்நாடக சங்கீத சாஸ்திரப் பாடப்பரப்பில் உச்சப் பயன்பாட்டினை பெறும் நோக்குடன் இன்று திங்கட்கிழமை காலை 9மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் கர்நாடக சங்கீத கருத்தரங்கு [சாஸ்திரீயம்] ஒன்றினை ஸ்கந்தவரோதயா கல்லூரி நுண்கலைப் பிரிவினர் ஒழுங்கு செய்துள்ளனர்.

இக் கருத்தரங்கில் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை இசை விரிவுரையாளர் திருமதி த. சிதம்பரநாதன் கருத்துரை வழங்குவார். (க-152)

## கலாசார விழா

வலி தெற்கு கலை கலாசாரப் பேரவையின் கலை விழாவின் இறுதிநாள் நிகழ்வு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 5 30 மணி முதல் வலி.தெற்கு பிரதேச சபையின் உடுவில் உப அலுவலக திறந்த வெளியரங்கில் நடைபெறும்.

இன்றைய நிகழ்வுக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழகத்தின் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை தலைமை வகிப்பார்.

கலை விழாவில் இசைக் கச்சேரி, பரதநாட்டியம் நாடகம் ஆகிய நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (க-152)

## மட்டக்களப்பு- வாழைச்சேனை

# வீதியோரக் காடுகள் படையினரால் அழிப்பு!

கொழும்பு, மே. 15

மட்டக்களப்பு — வாழைச்சேனை பிரதான வீதியில் சந்திவெளி, முறக்கொட்டாஞ்சேனை வீதியோர காடுகள் இராணுவத்தினரால் அழிக்கப்பட்டு வருகின்றது.

பாதுகாப்பு கருதியே படையினர் இந்நடவடிக்கையை மேற்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை—

வயல் வேலைக்குச் செல்லும் கூலித்தொழிலாளர்கள் கிரான் பாலத்தடி இராணுவ முகாமில் 'பங்கர்கள்' காவலரண்கள் அமைக்கும் வேலைகளில் படையினரால் ஈடுபடுத்தபட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# போர் முனை படையினருக்கு விசேட ஒலிபரப்பு சேவை

கொழும்பு, மே 15

வடபகுதி போர் முனைகளில் உள்ள படையினர் தங்கள் உறவினர்கள், நண்பர்களுடன் தொடர்பு கொள்ளக் கூடிய வகையில் விசேட ஒலிபரப்புச் சேவையை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தபானம் ஆரம்பித்துள்ளது.

வார நாட்களில் சிங்கள சேவையில் தினமும் நண்பகல் 12 மணிமுதல் 12. 45 மணி வரை இந்த விசேட ஒலிபரப்பு இடம்பெறும்.

தகவல்கள், செய்திகள் மற்றும் வாழ்த்து நிகழ்ச்சிகள் என்பன அதில் ஒலிபரப்பாகும். இந்த விசேட நிகழ்ச்சியின் மூலம் முகாம்களில் உள்ள படையினருடன் அவர்களது உறவினர்கள் நண்பர்கள் தொடர்பு கொள்ள முடியும்.

# இரவு நேரத்தில் நடமாட மன்னாரில் படையினர்தடை

கொழும்பு, மே 15

மன்னார் பிரதேசத்தில் கடற்படையினர் நிலை கொண்டுள்ள எல்லைக்குள் வாழும் மக்கள் மாலை 6 மணிக்கு பின்னர் வெளியே நடமாடக் கூடாதென அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் பொலிஸாரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதி மக்கள் இரவு 10 மணி வரை வெளியே நடமாட முடியும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-14)

# உணவு முத்திரைக்கு பதில் பணம் வழங்கத் திட்டம்

குறைந்த வருமானம் பெறுவோருக்கு வழங்கப்பட்டு வந்த உணவு முத்திரைகளுக்குப் பதிலாக பணம் வழங்கும் திட்டமொன்றை அரசு யூன் மாதத்திலிருந்து அமுல் செய்யவுள்ளது.

இந்தக் கொடுப்பனவுகள் அஞ்சல் அலுவலகங்கள் ஊடாக வழங்கப்படும்.

உணவு முத்திரைக்காக தற்போது அரிசி, சீனி, மண்ணெண்ணெய், பருப்பு ஆகிய பொருள்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன.

புதிய திட்டத்தின்படி அண்மையிலுள்ள அஞ்சல் அலுவலகத்தில் உணவு முத்திரைக்கான பெறுமதியைப் பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ-10]

## திருமலை துறைமுகப்பகுதியில்உள்ள

# கல்யாண மண்டப முகாம் மூடப்படும் என 'அறிவிப்பு

கொழும்பு, மே 15

திருமலைத் துறைமுக உள் வீதியில் இருக்கும் கல்யாண மண்டபத்தில் நிறுவப்பட்டுள்ள இராணுவ முகாம் அப்பகுதியிலிருந்து அகற்றப்படும் என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்தரத்வத்த நாடாளுமன்றத்தில் அறிவித்துள்ளார்.

குடிமக்கள் வாழும் பகுதியில் இந்த முகாம் அமைக்கப்பட்டுள்ளதால் அங்குள்ள மக்கள் பெரும் அச்சத்தின் மத்தியில் வாழ்ந்து வருவதாக அவசரகாலச்சட்ட நீடிப்பு விவாதத்தில் பேசிய தமிழ் எம். பி. ஒருவர் கோரிக்கை விடுத்ததை அடுத்தே பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் முகாம் அங்கிருந்து அகற்றப்படுமென உறுதியளித்ததாக கொழும்புத் தமிழ்ப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7)

## கிழக்கு பல்கலை விரிவுரை ஆரம்பம்

கொழும்பு, மே. 15

கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் அனைவருக்குமான விரிவுரைகள் எதிர் வரும் 23 ஆம் திகதி ஆரம்பமாகும் என்று துணைவேந்தர் பேராசிரியர் எஸ். சந்தானம் அறிவித்துள்ளார்.

பல்கலைக்கழக ஆசிரியர்களுடன் துணைவேந்தர் நடத்திய கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. (ஐ-3)

## வித்தியானந்தன் நினைவு பேருரை

யாழ்ப்பாணம், மே 15

பேராசிரியர் சு. வித்தியானந்தன் நினைவுப்பேருரை 17 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3 மணி முதல் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவரீர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் "புறநானூறு காட்டும்தமிழர் சால்பு — ஒரு மீள்பார்வை" எனும் பொருளில் நினைவுரையை நிகழ்த்துவார். (க)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 15

யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து கூட்டுறவுச் சங்கங்களின் கல்வி உத்தியோகத்தர்களுடனான வட-கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையில் நடைபெறும். [க-4]

## இன்று

ஈழத்துத் தமிழ்ச் சுருக்கெழுத்துத் தந்தை அமரர் சி. இராமலிங்கத்தின் 6ஆவது நினைவுதின நிகழ்வு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் நடைபெறும். [க]

# மன்னாரில் வெள்ளைக் கொடியுடன் மீன் பிடிக்க அனுமதி வழங்கப்படுமாம்

கொழும்பு, மே 15

மன்னார் கடல் பகுதியில் வெள்ளைக் கொடியுடன் படகுகளில் மீன் பிடிக்க அனுமதி வழங்கப்படும் என மாவட்ட பாதுகாப்பு இணைப்பதிகாரி பிரிகேடியர் எஸ் டி தென்னக்கோன் உறுதி அளித்துள்ளார்.

மன்னார் செயலகத்தில் மீனவர் பிரதிநிதிகளுக்கான மாநாடொன்றை நடத்திய பிரிகேடியர் தென்னக்கோன் மன்னார் பிரதேசத்தில் மீன்பிடித்தடையை ஓரளவு தளர்த்துவது தொடர்பாக விரைவில் அறிவிப்பொன்றை வெளியிடப் போவதாக கூறினார்.

இப்பிரதேச மீனவர்களின் கஷ்டத்தை நீக்கும் வகையில் தடையை தளர்த்த ஆவன செய்வதாக அவர் தெரிவித்தார்.

காலை 7மணி முதல் பிற்பகல் 4மணிவரையில் 2மைல் தூர கடல் எல்லைக்குள் மன்னார் மீனவர்கள் மீன்பிடிக்க அனுமதி பெற்றுத் தருவேன்.

மீனவர்கள் தமது படகுகளில் வெள்ளைக் கொடிகளை பறக்க விடவேண்டும்.

படகுகள் பற்றியும் கடலுக்குச் செல்லும் மீனவர்கள் பற்றியும் விவரங்கள் இராணுவத்துக்கு தெரியப்படுத்தப்பட வேண்டும்—இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். [ஐ-14]

## இசைவிழா

யாழ்ப்பாணம், மே 15

வேலணை, ஊர்காவற்றுறை கல்விக்கோட்டங்களின் இசைவிழா நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணி முதல் சுண்டிக்குளி சென். ஜோன்ஸ் அக்கடமியில் நடைபெறும்.

வேலணைக் கல்விக்கோட்டப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. சி. நடேசபிள்ளை தலைமையில் நடைபெறும் இசைவிழாவில் திருமதி கமலா தங்கராஜாவின் பண்ணிசை, திருமதி ஜெயவாணி விவேகானந்தன், செல்வன்ீதி.கருணாகரன் ஆகியோரின் இசை செல்வி சிவகலா சிவஞானத்தின் வயலினிசை ஆகியன இடம்பெறும். (க)

## 5 முதல் 15 வயது பிள்ளைகளுக்கு

# பாடசாலைக் கல்வி கட்டாயமாக்கப்படும்

கொழும்பு, மே. 15

ஐந்து முதல் பதினைந்து வயது வரையான பிள்ளைகள் அனைவரும் கட்டாயம் பாடசாலை செல்ல வேண்டும் என்று கூறும் சட்டம் நாடாளுமன்றத்தில் விரைவில் நிறைவேறும் என்று நன்னடைத்தை குழந்தைப் பராமரிப்பு ஆணையாளர் பதமா ரணசிங்க கடந்த 11 ஆம் திகதி அறிவித்தார்.

பெற்றோர் அல்லது பாதுகாவலர்கள் 15 வயதுக்குட்பட்ட பிள்ளைகளை கட்டாயம் பாடசாலைக்கு அனுப்ப வேண்டும், தவறினால் இச் சட்டத்தின்படி அவர்கள் தண்டனைக்குள்ளாவர் என்று அவர் கூறினார். (க)

# ஆஸ்திரேலிய அமைச்சர் கொழும்பு வருகிறார்

## இனப்பிரச்சினை குறித்து பேசுவார்

ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் திரு. சார்க் இவான் ஒருநாள் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு எதிர்வரும் 22 ஆம் திகதி கொழும்புக்கு வரவுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, வெளிவிவகார அமைச்சர் திரு. லக்ஷ்மன் கதிர்காமர், நீதி அரசமைப்பு விவகார வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் ஆகியோருடன் அவர் பேச்சு நடத்துவார்.

இனப்பிரச்சினை தொடர்பாகவும், சமாதானத் தீர்வு ஒன்றை காண்பதில் ஆஸ்திரேலிய அரசின் பங்களிப்பு குறித்தும் அவர் அரசுடன் பேச்சு நடத்துவார் என அறிவிக்கப்பட்டுள்ளது. [ஐ-14]

## ஜி. சீ. ஈ. பரீட்சை ஒகஸ்டில் நடக்கும்

கொழும்பு, மே 15

கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சையை ஒகஸ்ட மாதத்தில் நடத்துவதற்கு சகல ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுவிட்டதாகப் பரீட்சை ஆணையாளர் ஆர். குணரத்தின தெரிவித்துள்ளார்.

இந்தப் பரீட்சை பிற்போடப்படும் என பரவியுள்ள தகவல்களில் எதுவித [illegible] குறிப்பிட்டுள்ளார். [ஐ-14]

## குமுதினி படகு படுகொலை 10 ஆண்டுநினைவு

நெடுந்தீவு குமுதினி படகு படுகொலையின் பத்தாவது ஆண்டு நினைவையொட்டிய நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை பி. ப. 2-30மணிக்கு சுண்டிக்குளி சென். ஜோன்ஸ் அக்கடமி மண்டபத்தில் திரு. வ. ஐ. ந. பத்மகுமார் தலைமையில் நடைபெறும்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்க நெடுந்தீவுப் பிரிவின் ஆதரவில் நடைபெறும் இந் நிகழ்வில் நினைவுத் தீபம் ஏற்றல், நினைவஞ்சலி உரைகள், இசையமுதம் கவியரங்கம், வில்லுப்பாட்டு மற்றும் இச் சம்பவத்தில் உயிர் தப்பியவருடனான நேர்காணல் என்பன இடம் பெறும்.

# மாத்தளை நகரில் 23 தமிழர்கள் கைது!

மாத்தளை நகரப் பகுதியில் கடந்த புதன்கிழமை பொலிஸார் நடத்திய தேடுதலின் போது மூன்று பெண்கள் உட்பட 23 தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்.

மட்டக்களப்பு, வாகரை, வவுனியா மற்றும் மலையக பகுதிகளில் இருந்து அங்கு சென்று பணிபுரியும் பலர் பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

தேடுதலின் போது மாத்தளை நகரில் இருந்து மலையகப் பகுதிக்குச் சென்ற சகல வாகனங்களும், மாத்தளை நகருக்குள் பிரவேசித்த சகல வாகனங்களும் பொலிஸாரால் சோதனையிடப்பட்டன. (ஐ-3)

## நேற்றுப் போல் இருக்குதையா; நெஞ்சமெல்லாம் வேகுதையா!

தாய்நிலத்தில் தலைமுறையாய்
வாழ்ந்து வந்த தமிழினத்தார்
வீழ்ந்து பட்ட வரலாறு - எமை
வேதனையின் விளிம்பினிலே
வேக வைத்த வரலாறு
ஆண்டு பத்து சென்றாலும்
அடிமனதில் வேரூன்றி
நீண்ட 'வடு' வமைத்த
நெஞ்சகலா சோக வரலாறு.....
காற்று படபடக்கும்
கடலோசை ஆர்ப்பரிக்கும்
தோற்றறியாத் தீவகத்தார் - வாழ்வில்
துயர் நிறைந்து போனதையா
மாற்றான் கொடும் படைகள்
மண்டியிட்டு வாழாத மைந்தர்களை
ஆற்றாமை கொண்டழித்து
காற்றோடும் கடலோடும்
கதை முடித்த வரலாறு.....
நேற்றுப் போல் இருக்குதையா
நெஞ்ச மெல்லாம் வேகுதையா.

— ஆவூர்க்குமரன்

## அவர்கள் கனவு விடுதலையே!

காலைக் கதிரின் ஒளியில் உலகின்
காரிருள் அகன்ற வேளை
ஆழக் கடலைக் கிழித்தவள் குமுதினி
அதிர்ந்தனள் இருளில் மூழ்கி
வாழும் கனவில் மிதந்தனர் பிணமென
வீழ்ந்தனர் கடல் சிவக்க
அந்நாளின் நினைவில் நெடுந்தீவன்னை
நனைகிறாள் கண்ணீரில் நொந்து

வாள் எடுத்தவர் வாழ்வை முடித்தவர்
வாளில் துண்டாகிறார் இன்று
ஏழை கண்களால் விழுந்த கண்ணீரும்
ஈட்டியாய் சாய்க்கும் உண்மை
நீலக் கடலில் நீசனாய் நடந்தவன்
நிம்மதி குலைந்த தின்று
மீளாத் துயிலில் உறைந்தவர் கனவெது
மேன்மை கொள் விடுதலையே!

—நெடுந்தீவு லக்ஷ்மன்

(குமுதினிப் படகில் பயணம் செய்த அப்பாவிப் பொதுமக்களை கடற்படையினர் கண்டதுண்டமாக வெட்டிக் கொன்ற கொடுமையின் பத்தாம் ஆண்டு நினைவையொட்டி இக்கவிதைகள் வெளியிடப்படுகின்றன.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 காவலர் வீதி
யாழ்ப்பாணம்

## உரியவர் வாயால் வந்த உண்மை!

விடுதலைப் புலிகள் நடத்தக்கூடிய எந்த ஒரு தாக்குதலையும் எதிர்கொள்வதற்கு படையினர் தயாராகவே உள்ளனர் — என்று இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெரி டி சில்வா தெரிவித்திருக்கிறார்.

வடக்கில் உள்ள இராணுவ முகாம்களை விடுதலைப் புலிகள் முற்றுகையிட்டுள்ளனர். வெசாக் தினத்துக்கு முன்னர் அந்த முகாம்கள் மீது அவர்கள் தாக்குதல்களை நடத்தக்கூடும். வடக்கு இராணுவ முகாம்களுக்கு விமானங்கள் கப்பல்கள் மூலம் உணவு மற்றும் தேவையான பொருள்களை அனுப்ப முடியாதுள்ளது. அதனால் படையினர் மனம் சோர்ந்து போயுள்ளனர். போர் புரியும் மனோ நிலையில் அவர்கள் இல்லை— என்றவாறான கொழும்புப் பத்திரிகைகளின் செய்திகள் சிங்கள மக்களிடையே இராணுவத்தின் பலம் குறித்து சந்தேகத்தை எழுப்பின.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில், போரை நடத்துவதற்கான ஆற்றலும் திடசங்கற்பமும் அரசுக்கு இருப்பதாகத் தெரிவித்தார்.

அதன் தொடர்ச்சியாக, போரை நடத்தக்கூடிய மனோதிடம் படையினருக்கு உண்டு என்பதை வெளிப்படுத்துவதே இராணுவத் தளபதியின் செவ்வியின் நோக்கம் படையினர் மனச்சோர்வு அடைந்துள்ளனர்; அவர்களுக்கு இக்கட்டான நிலை உண்டாகியுள்ளது. அதனால் அரசு போரில் தோற்றுவிடலாம் என்ற எண்ணம் சிங்கள மக்களிடையே வளராமல் தடுப்பதில் அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் ஒன்றே இராணுவத் தளபதியின் செவ்வி.

ஆனால் கொழும்புப் பத்திரிகைகள் வெளியிட்ட பல தகவல்களை ஊர்ஜிதம் செய்யும் வகையிலேயே இராணுவத் தளபதியின் பதில்கள் அமைந்துள்ளன.

வடபகுதி இராணுவ முகாம்களுக்கு உணவு விநியோகம் முன்னரைப்போல நடைபெறவில்லை. அதனால் ஏற்கனவே சேமித்து வைக்கப்பட்ட உணவுப் பொருள்களை மட்டுமே சிப்பாய்கள் தமது தேவைக்கு நம்பி இருக்கவேண்டி உள்ளது.

மோதல் ஒன்று நடைபெற்று சிப்பாய்கள் காயமுற்றால் அவர்களைச் சிகிச்சைக்கு எடுத்துச் செல்வதற்கு வசதி இல்லை— இவற்றை இராணுவத் தளபதி ஒப்புக்கொள்கிறார்!

விடுதலைப் புலிகள் இதுவரை நடத்திய தாக்குதல்களை வசதியீனங்களுக்கு மத்தியிலேயே எதிர்கொள்ள வேண்டி இருந்ததாக இராணுவத் தளபதி கூறுகிறார்.

இடம், இலக்கு, நேரம் என்பனவற்றைத் தேர்ந்தெடுப்பதில் விடுதலைப் புலிகள் தமக்கு சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொள்வதாகவும் இராணுவத் தளபதி சொல்கிறார்.

அதாவது விடுதலைப் புலிகளின் இராணுவத் திறமையை ஒப்புக் கொண்டு, அவர்களின் தாக்குதல்களை எதிர்கொள்ளும் திறமை தமக்கு (வசதியீனங்களால்) குறைவு என்பதை ஒப்புக் கொள்வதாக அவரது பதில் அமைகிறது.

பத்திரிகைச் செய்திகளால் இராணுவத்தின் நிலை குறித்து எழக்கூடிய சந்தேகங்களை நிவிர்த்தி செய்யப் புறப்பட்டு, அவற்றை ஊர்ஜிதம் செய்வதாகவும், மேலும் தமது திறமையின்மையை வெளிக்காட்டுவதாகவும் இராணுவத் தளபதியின் செவ்வி அமைந்துள்ளது

எப்படியோ இப்போது நிலவும் கள நிலைமையை, விடுதலைப் புலிகளின் ஏவுகணைத் தாக்குதலின் பின்னர் படைத்தரப்பில் உண்டான பின்னடைவை இராணுவத் தளபதி தாமே வெளிப்படுத்தி இருக்கிறார். உரியவர் வாயால் உண்மை நிலை வெளிவந்திருக்கிறது.

# 2 ஆம் ஈழப்போரின் போதே புலிகளிடம் ஏவுகணை பயன்படுத்தும் பலம் இருந்தது

விடுதலைப் புலிகளின் ஏவுகணைத் தாக்குதல் ஒரு திருப்புமுனையாக அமைகிறது.

இத்தாக்குதல் தரையிலிருந்து விண்ணுக்கு ஏவும் ஏவுகணையை புலிகள் பயன்படுத்திய முதல் நிகழ்ச்சி என்று சில தொடர்புசாதனங்கள் குறிப்பிட்டுள்ளன. புலிகள் விமான எதிர்ப்பு ஏவுகணைகளை முதல் தடவையாகப் பெற்றுள்ளனர் என இது அர்த்தப்படுகிறது; இது தவறானது.

கடந்த வாரத் தாக்குதல்கள் விமான எதிர்ப்பு ஏவுகணைப் போரில் விடுதலைப் புலிகள் பெற்ற ஆரம்ப வெற்றிகள் ஆகும்; அவர்களிடம் தரையிலிருந்து விண்ணுக்கு ஏவும் ஏவுகணைகள் இருக்கின்றன என்பதன் நிச்சயமான நிரூபணமாகும்.

சாம் ஏவுகணைகள் குறைந்தபட்சம் பத்தாண்டுக்கும் அதிகமானகாலம் புலிகள் வசம் இருந்திருக்கின்றன.

1985இல் விடுதலைப் புலிகள் மத்திய கிழக்குத் தொடர்புகள் மூலம் இரண்டு சோவியத் யூனியனின ''சாம் – 7'' ஏவுகணைகளைப் பெற்றனர். மாதிரிகளாகவே அமைந்த இந்த ஏவுகணைகள் சென்னைக்கு கள்ளத்தனமாக எடுத்துவரப்பட்டன. ஏற்றி இறக்கலில் ஏதோ தவறு ஏற்பட்டு ''வெப்ப பற்றறிகள் செயற்படாது போயின. இதனால் ஏவுகணைகள் பயனற்றவை ஆகின.

சென்னையின் சுற்றுப்புறத்தில் உள்ள திருவான்மியூரில் பாதுகாப்பான வீடு ஒன்றில் இந்த ஏவுகணைகள் களஞ்சியப்படுத்தப்பட்டன.

1986இல் தமிழ் நாடு பொலிசார் பெருமளவிலான மாநிலம் தழுவிய தேடுதல் ஒன்றை நடத்தினார்கள். இத்தேடுதலின்போது இந்த ''மாதிரி'' ஏவுகணைகளும் பறிமுதல் செய்யப்பட்டன.

பின்னர் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் ஏற்படுத்திய நிர்ப்பந்தத்தில் ஆயுதங்கள் திருப்பிக் கொடுக்கப்பட்டன பிரபாகரன் சாகும்வரையான உண்ணாவிரதம் ஒன்றை அப்பொழுது மேற்கொண்டார், ஏவுகணைகளும் திருப்பிக் கொடுக்கப்பட்டன.

தீவிரவாதிகளின் கரங்களில் ஏவுகணைகள் இருக்கின்றன என்பதைப்பற்றி இந்திய அதிகார வட்டாரங்கள் அறிந்து கொண்ட முதலாவது சம்பவம் இதுவாகும்.

இந்த 'மாதிரி' ஏவுகணைகள் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள — விடுதலைப் புலிகளின் பொருட்காட்சிக்கு எனக் கொண்டு வரப்பட்டவை என்று பகட்டாகக் கூறி புலிகள் இந்தச் சிக்கலான நிலைமையில் இருந்து தப்பிக்கொண்டார்கள்.

### இந்தியா அளித்த ஏவுகணைப் பயிற்சி

பின்னர் 1987 இல் இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து எடுக்க வேண்டாம் என்று இந்தியா ஸ்ரீலங்கா அரசுக்கு உத்தரவிட்டதையும் பொருட்படுத்தாமல் ஸ்ரீலங்கா ஆயுதப் படைகள் 'ஒபரேஷன் வடமராட்சி'யைத் தொடுத்தன.

கொழும்பின் மீது அழுத்தத்தைத் திணிக்க புதுடில்லி பல்வேறு முறைகளைப் பாவித்தது. அதில் ஒன்று தமிழ்த் தீவிரவாதிகளுக்கு விமான எதிர்ப்பு ஏவுகணைப் பயிற்சி அளித்ததாகும்.

தமிழ்த் தீவிரவாதிகளுக்குப் பயிற்சி அளிப்பதைப் புதுடில்லி கொழும்புக்கு உத்தியோக பூர்வமாக அறிவிக்க முடியாதென்றபடியால் செல்வாக்கான இந்திய செய்திப் பத்திரிகை ஆசிரியர் ஒருவர் இதற்குப் பயன்படுத்தப்பட்டார்.

ஸ்ரீலங்கா அரசாங்கத்துடன் விசாலமான தொடர்புகள் உடைய இந்த சிரேஷ்ட இந்தியப் பத்திரிகையாளர் கொழும்பின் மேல் மட்டத்தில் உள்ளவர்கள் சிலருக்கு நிலைமை பற்றி 'உத்தியோக பூர்வமற்ற' முறையில் விளக்கிக் கூறினார்.

தமிழ்த் தீவிரவாதிகளுக்கு ''சாம் -7'' ஏவுகணைகளை வழங்குவது மிகவும் சாத்தியம் எனவும் —

ஸ்ரீலங்கா ஆயுதப் படைகளின் வான் வலுச் சாதக நிலைமை இதனால் பாதிக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

ஜனாதிபதி ஜெயவர்த்தனா ராஜீவ்காந்தியுடன் இந்திய— இலங்கை ஒப்பந்தத்தைக் கைச்சாத்திடுவதை இந்த விஷயமும் தூண்டியிருக்கலாம்.

தமிழ்த் தீவிரவாதிகளுக்கு விமான எதிர்ப்பு ஏவுகணைகளை வழங்குவது என்ற இந்தியாவின் அச்சுறுத்தல் செயலுருப் பெறாவிட்டாலும் 'சாம் -7' ஏவுகணைப் பயிற்சி மட்டும் வழங்கப்பட்டது.

ஆறு தமிழ்க் குழுக்களின் உறுப்பினர்கள் வட இந்தியாவின் உத்தரப் பிரதேசத்துக்குக் கூட்டிச் செல்லப்பட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டார்கள்.

> ''கடிதங்களில் இருந்து ஏவுகணைகளுக்கு'' என்ற தலைப்பில் கடந்த 7 ஆம் திகதி 'சண்டே லீடர்' வார இதழில் டி.பி.எஸ் ஜெயராஜ் எழுதியுள்ள கட்டுரையின் தமிழாக்கம் இங்கே பிரசுரமாகின்றது

விடுதலைப் புலிகளின் அணிக்கு முன்னாள் திருகோணமலைப் பிரதேசத் தலைவரான புலேந்தி அம்மான் என்ற புலேந்திரன் தலைமை தாங்கினார் தீவிரவாதிகளுக்கு விசாலமான பயிற்சி அளிக்கப்பட்டது.

பயிற்சியின் போது சோவியத் யூனியன் தயாரிப்பான ''சாம் 7'' ஏவுகணைகளும் வேறுபட்ட தூரம், உயரம், வேகம் ஆகியவற்றுடன் பறக்கும் 'உண்மை' விமானங்களும் பயன்படுத்தப்பட்டன.

தீவிரவாதிகள் இலக்கைத் தாக்கும் அளவிற்குப் பயிற்சி பெற்றனர். அவர்கள் செய்யாதது இரண்டாவது கட்டமாகும். அதாவது நிஜ ஏவுகணையைச் செலுத்தாதே ஆகும்.

பயிற்சி பெறும் போராளிகள் குறிப்பு எழுதுவதைத் தடுப்பதில் இந்தியர்கள் மிகவும் கவனமாக இருந்தார்கள் பயிற்சி முடிந்தபோது அவர்களை முற்றாகச் சோதித்து குறிப்புகள் வைத்திருக்கிறார்களா என்று கண்டறிவதில் இந்தியர்கள் தீவிரமாக இருந்தார்கள்.

ஆனால் புலேந்திரன் மட்டும் சில குறிப்புகளைக் கள்ளத் தனமாக எடுத்துச் செல்ல முடிந்தது என்று கூறப்பட்டது.

### ஏவுகணைக் கொள்வனவு

பின்னர் விடுதலைப் புலிகள் சர்வதேசிய ஆயுதக் கறுப்புச் சந்தையில் 'சாம்—7'' ஏவுகணைகளைக் கொள்வனவு செய்ய முயற்சித்தார்கள். வெளிநாட்டுக் கொள்வனவுகளின் தலைவரான கே. பி. என்ற குமாரன் இதில் ஓரளவுக்கு வெற்றி பெற்றார்.

ஒரு குறிப்பிட்ட தொகை சோவியத் தயாரிப்பு விமான எதிர்ப்பு ஏவுகணைகள் இரகசியமாக யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டன. இவை 1987 ஆம் ஆண்டு ஜூலை 29 க்கும் ஒக்ரோபர் 10க்கும் இடைப்பட்ட காலத்தில் ஏற்பட்ட குறுகிய கால இடைவெளியின் போது அனுப்பப்பட்டன.

இந்தியர்களுக்கும் புலிகளுக்கும் இடையில் சண்டை ஏற்பட்ட போது விடுதலைப் புலிகள் இந்த ஏவுகணைகளைப் பயன்படுத்த முயற்சித்தார்கள் வடபகுதி வானில் இத்தகைய இரண்டு சம்பவங்கள் நிகழ்ந்துள்ளதாக இந்தியர்கள் பதிவு செய்துள்ளார்கள்.

முதலாவது நிகழ்வில் விடுதலைப் புலிகளின் ஏவுகணை அதன் இலக்கைத் தவறியது. ஒரு இந்திய விமானம் அருந்தப்பாகத் தப்பியது.

இரண்டாவது நிகழ்வில், இந்திய ஹெலிகொப்டர் ஒன்று றொக்கெட் ஒன்றைக் கீழே செலுத்தியது. இதில், அரிதான நிகழ்ச்சி ஒன்றில் றொக்கெட்டும் ஏவுகணையும் மோதி நடுவானில் வெடித்தன.

இந்தியர்கள் யாழ்ப்பாணத்தைப் பிடித்தபோது விடுதலைப் புலிகள் குடா நாட்டிலிருந்து தப்பிச் சென்றார்கள். ஏவுகணைகளும் ஏனைய ஆயுதங்களும் பல்வேறு இடங்களில் மறைத்து வைக்கப்பட்டன.

இந்த ஏவுகணைகளில் ஒன்று யாழ்ப்பாணத்தில் பிரபல்யமான தேசிய [illegible] ஆசிரியரான [illegible] ராஜாவின் [illegible] டில் காணப்பட்டது. அவர் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு, விடுக்கப்பட்டார்.

பின்னர் இந்தியாவின் ஈ. பி. ஆர். எல். எவ். [illegible] அவருடைய வீட்டுக்குச் சென்று அவரை சுட்டுக் கொன்றார்கள்.

இந்த வேளையில், விடுதலைப் புலிகளிடம் ஏவுகணைகள் உண்டு என்று இந்தியர்கள் உத்தியோக பூர்வமாக அறிவித்தார்கள். இந்தியா தான் தமக்கு ஏவுகணைகளைத் தந்தது என்று விடுதலைப் புலிகள் பதில் அளித்தார்கள். இது அப்பட்டமான பொய் என்ற போதும் இதனால் இந்தியர்கள் அப்பொழுது பெரும் சங்கடத்துக்கு உள்ளாகினர்.

இந்தியா (வடக்கை) நிலை கொண்டிருந்த 1987 ஜூலை 1990 மார்ச் காலகட்டத்தில் விடுதலைப் புலிகள் விமான எதிர்ப்பு ஏவுகணைகளை வாங்குவதற்கென்று வெளிநாடுகளில் உள்ள தமிழர் மத்தியில் பிரமாண்ட நிதி சேர்ப்பு இயக்கம் ஒன்றை நடத்தியது குறிப்பிடத்தக்கது.

இரண்டாம் ஈழயுத்தத்தின் இரண்டாம் கட்டத்தின் போது தம்வசமுள்ள ஏவுகணைகளை விடுதலைப் புலிகள் பாவிப்பார்கள் என்று பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது ஆனால் அது நடைபெறவில்லை.

இந்த ஏவுகணைகளுக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை.

இந்தியர்கள் இவற்றை எடுத்துக்கொண்டார்கள். ஆனால் முந்திய சங்கடநிலைமை காரணமாக அதைப் பற்றிச் செய்தி வெளியிடவில்லை என்பது ஒரு கருத்து.

இந்திய இராணுவ காலத்தில் களஞ்சியப்படுத்தி இருந்தபோது, அல்லது ஏற்றி இறக்கியபோது அவை செயல் இழந்தன என்பது இன்னொரு கருத்து. இந்தக் கருவிகளை ஏற்றி இறக்கும்போது நுணுக்கமாகக் கையாளவேண்டும்; களஞ்சியப்படுத்தும் போது அவற்றுக்குக் குறிப்பிட்ட வெப்ப நிலை தேவை.

இந்திய இராணுவ காலத்தில் இவற்றைச் செய்திருக்க முடியாது. இதனால் ஏவுகணைகள் பயனற்றவை ஆகியிருக்கலாம்.

அப்பொழுது இந்த ஏவுகணைகளை 'தம்பிமுத்து' என்று விடுதலைப்புலிகள் அழைத்தார்கள் முன்னாள் தமிழர் விடுதலைக் கூட்டணி அரசியல் வாதியும் நாடாளுமன்ற வாதியுமான சாம் தம்பிமுத்துவின் பெயர் இது ஏவுகணையின் பெயர் சாம்-7 ஆகும்.

1990இல் சாம் தம்பி முத்துவும் அவருடைய மனைவியும் கொழும்பில் விடுதலைப் புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டது விந்தையானதே.

### விடுதலைப்புலிகளின் விமான எதிர்ப்பு

இரண்டாம் ஈழயுத்தத்தின் போது விடுதலைப் புலிகள் 50 கலிபர் நெடுந் தூரத் துப்பாக்கிகளை விமான எதிர்ப்புத் துப்பாக்கிகளாகப் பாவித்தார்கள் இவை அநேகமாக மோட்டார் ஜீப் வாகனம் ஒன்றில் பொருத்தப்பட்டிருக்கும்.

ஆரம்ப காலத்தில் இத்தகைய ஒரு குறியில்லாத சூட்டினால் யாழ்ப்பாணக் கோட்டைக்கு அருகில் சியாமாச் செட்டி விமானம் ஒன்று விழுத்தப்பட்டது. யுத்தத்தின் போது விமான எதிர்ப்புத் துப்பாக்கிகளைக் கொண்டு சில ஹெலிகொப்டர்கள் சேதப்படுத்தப்பட்டன. சில செயல் இழக்கச் செய்யப்பட்டன.

வெற்றிலைக்கேணிக்கு அருகில் சினவை- 12 ஏற்றியிறக்கல் விமானம் ஒன்று விழுந்து நொறுங்கியமை ஆயுதப்படைகளுக்குக் கிடைத்த இன்னொரு அடியாகும். தாம்தான் அதை சுட்டு வீழ்த்தினர் என்று புலிகள் கூறினார்கள். அது ஒரு விபத்து என்று அரசாங்கம் கூறியது.

பாதுகாப்புப் படைகள் வான்வலுவைப் பொறுத்தவரை இன்னும் இரண்டு தோல்விகளைச் சந்தித்தன. திருகோணமலை சீனக்குடாவில் ஏற்பட்ட 1992 தோல்வி ஒன்றாகும். கடந்த ஆண்டு பலாலி விமானத் தளத்துக்குள் புலிகள் ஊடுருவியது இன்னொன்றாகும். இதில் பல விமானங்கள் [illegible] டுத்தப்பட்டன.

வடக்கு வானில் பறந்த விமானங்கள் அரிதாகவே தாழப் பறந்தன என்பது இரண்டாம் ஈழ யுத்தத்தின் முக்கியமான அம்சங்களில் ஒன்றாகும். இது, விடுதலைப் புலிகளின் வான் தாக்குதலுக்கு எதிரான முன்னேற்பாட்டு நடவடிக்கையாகும்.

இந்த ஆண்டு 100 நாள் மோதல் நிறுத்த காலத்தில் வல்லிபுரக் கோயிலுக்கு அருகில் உள்ள கடற்கரையில் விடுதலைப் புலிகளின் கப்பல் ஒன்று ஆயுதங்களை இறக்கியது என்று வெளிநாட்டுத் தமிழர் மத்தியில் பேச்சு அடிபட்டது.

பல விமான எதிர்ப்பு ஏவுகணைகளும் அவற்றுள் அடங்கும் என்று கூறப்பட்டது. இத்தகவல் வெளிநாட்டுத் தமிழரின் மன ஆசையிலிருந்து எழுந்த கற்பனை என்று சிலர் கருதினார்கள்.

### வான்வலுவின் வளர்ச்சி

இதற்கு முன்னதாக இன்னொரு வளர்ச்சி பற்றி செய்திகள் வந்தன. விடுதலைப் புலிகள் வான்படை ஒன்றை அமைத்துள்ளார்கள் என்று உள்நாட்டு வெளிநாட்டுத் தொடர்பு சாதனங்கள்செய்திகளை வெளியிட்டன. விமானப் பறத்தல், விமானப் பொறியியல், விமானப் பராமரிப்பு ஆகியவற்றில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் மேற்கில் பயிற்சி பெற்றுள்ளார்கள்; இலேசான விமானங்களும் தூரத்திலிருந்து கட்டுப்படுத்தும் விமான மாதிரிகளும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன; கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரு இரகசிய விமானத்தளம் அமைக்கப்பட்டுள்ளது: யாழ்ப்பாணக் குடாநாட்டின் தெற்குப் பகுதியில் மினி — விமானத்தளம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

கனடாவின் மொன்றியலில் வேலை செய்த அனுபவம் உடைய விமானவியல் பொறியியலாளரான சங்கர் என்ற சொர்ணலிங்கம் இந்த முழு வான் ஆயுதத்திட்டத்துக்கும் பொறுப்பாக இருந்தார்.

— இவ்வாறெல்லாம் விடுதலைப் புலிகளின் வான்வலு பற்றிய செய்திகள் வெளிவந்தன.

கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற புலிகளின் மேதினப் பேரணியில் புதியதோர் விடுதலைப் புலிகளின் பிரிவு ஒன்று பகிரங்கமாக அணிவகுத்துச் சென்றது. இந்த விமான எதிர்ப்புப் பிரிவு எல்லோரையும் கவர்ந்தது. விழுந்த விமானங்களின் துண்டுகளையும் மிக நவீன ஆயுதங்களையும் இவர்கள் காட்டிச் சென்றார்கள்.

'அவ்ரோ' விமானங்கள் மீதான தாக்குதல்கள் தரையிலிருந்து விண்ணுக்கு ஏவும் ஏவுகணைகள் மீது கவனத்தை இழுத்தன.

எத்தகைய ஏவுகணைகள்?

புலிகள் எத்தகைய ஏவுகணைகளைப் பாவிக்கின்றார்கள் என்பதே இன்றைய முக்கிய கேள்வி ஆகும். அவை உள்நாட்டுத் தயாரிப்பாக இருப்பது அரிது

ஆட்கள் தூக்கிச் செல்லக் கூடிய தரையிலிருந்து விண்ணுக்கு அனுப்பும் ஏவுகணைகள், சோவியத் யூனியனின் சாம் - 7 ஏவுகணைகள், பிரிட்டிஷ் பிளோபைப், அமெரிக்கா ஸ்ரிங்கர், பிரிட்டிஷ் ஜவெலின் - இவற்றில் எது?

அநேகமாகப் புலிகள் சோவியத் தயாரிப்பான சாம் - 7 ஏவுகணைகளேயே பாவிக்கின்றார்கள். இதற்கு சார்பாகப் பல காரணங்களைக் காட்ட முடியும்;

இந்தியாவில் பெற்ற பயிற்சி காரணமாக விடுதலைப் புலிகள் ''சாம்-7 ஏவுகணைகளுடன் மிகவும் பரிச்சயமாக இருப்பார்கள் தவிர, ஆட்கள் தூக்கிச் செல்லக்கூடிய அமெரிக்க, பிரிட்டிஷ் ஏவுகணைகள் விலை கூடுதலானவை.

சோவியத் யூனியன் உடைந்ததினால் முன்னாள் சோஷலிச முகாமில் விறுவிறுப்பான ஆயுதக் கறுப்புச்சந்தை ஒன்று வளர்ந்துள்ளது. விடுதலைப் புலிகள் அவர்களிடமிருந்து 'சாம்-7' ஏவுகணைகளை மலிவான விலையில் பெற்றிருக்க முடியும்

இத்தச்சந்தை ஏற்கனவே புலிகள் சென்று வாங்கக் கூடியதாக உள்ளது. விடுதலைப்புலிகள் பெருமளவு வெடிமருந்துகளை உக்ரேயினிலிருந்து கொள்வனவு செய்து அவற்றை ஓர் துறைமுகத்தில் ஏற்றினார்கள் என்று செய்திகள் கூறுகின்றன.

மோசத்தை சந்தித்த அவ்ரோ விமானத்தின் பிளைட் லெட்டினன்டான சுஜீவா பத்திரத்ன கூறியதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஏவுகணை தனது விமானத்தைத் துரத்திக் கொண்டு வந்ததென அவர் கூறியதாகக் கூறப்படுகிறது.

ஏவுகணை யுத்தத்தின் வருகை மோதலின் இயல்பில் ஒரு குணாம்சரீதியான மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. வடக்குப் பெரு நிலத்தில் பல இராணுவ முகாம்கள் வீழ்ச்சி அடைந்ததினால் உட்பிரதேசத்தில் படையினரின் தரை இயக்கம் பெரிதும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. வவுனியாவுக்குவடக்கே கடலுக்கு அருகேயுள்ள பிரதேசத்தில் அல்லது கடற்கரைப் பிரதேசத்தில்தான் பாதுகாப்புப் படைகள் தமது தீர்க்கமான பிரசன்னத்தைக் கொண்டிருக்கின்றன.

குவிந்திருக்கும் ஒரு முறை மூலம் இந்தப் பிரசன்னம் அமைந்திருக்கிறது. அதில் அடிப்படையான அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன

விடுதலைப் புலிகளின் கடற்படைப் பிரிவான கடற்புலிகளின் வலுவின் வளர்ச்சியுடன் விநியோகத்தையும் துருப்புகளின் இயக்கத்தையும் பேணிக்காப்பதற்கு விமானப் படையில் தங்கியிருப்பது பெரிதும் அதிகரித்துள்ளது புலிகள் ''சாம்-7'' ஏவுகணைகளைப் பெற்று வெற்றிகரமாக அவற்றைப் பயன்படுத்தியமை வடக்கில் இராணுவ சமநிலையைப் பெரிதும் பாதிக்கக்கூடும்.

வான் தாக்குதல்களை அடுத்து 24 மணிநேரத்தில் வடக்கிற்கான சகல விமான சேவைகளையும் தற்காலிகமாக நிறுத்தியமை அதிகார வட்டாரங்களின் எதிரொலிப்பைக் காட்டுவதாக அமைகின்றது.

ஏவுகணை அச்சுறுத்தலுக்கு முகங்கொடுப்பதில் பாதுகாப்புப் படைகளுக்கு இரண்டு வழிகள் உள்ளன.

வடக்கில் முகாம்களின் வெளிச் சுற்றாலை விசாலிப்பது அவற்றில் ஒன்று இதன் மூலம் வான் இடப்பரப்பை அதிகரிக்கலாம். இதற்கு சில பின்னணித் தயாரிப்புகள் தேவை என்பது தான் சிக்கல். இப்பொழுது இதைச்செய்வது கஷ்டமாக இருக்கும்.

அத்துடன் போதிய ஆட்பலம் இன்றி இராணுவ நிறுவனங்களைப் பரப்பளவில் விஸ்தரிக்கும் போது படைகள் அடர்த்தி இல்லாமல் பரவி இருக்கும் நிலைஏற்படும் அப்பொழுது புலிகள் தாக்குவதற்கு இலேசாக இருக்கும்.

அடுத்த சில வாரங்கள் மிக முக்கியமானவையாக அமையும். எதிர்காலத்தில் புலிகள் ஏவுகணைகளை எவ்வாறு பயன்படுத்த இருக்கிறார்கள் என்பது இன்னமும் தெரியாத விஷயம்.

கடந்த காலத்தில் புலிகள் தலைவர் பிரபாகரனுக்கு கடிதத்துக்குப்பின் கடிதம் அனுப்பிய ஜனாதிபதி குமாரதுங்க இப்பொழுது விடுதலைப் புலிகளின் தலைவர் ஏவுகணைக்குப் பின் ஏவுகணைகளை அனுப்புகின்ற மாறிய நிலைமையில் — எவ்வாறு எதிரொலிப்பார் என்பதே இன்றைய கேள்வியாகும்.

(க)

## மன்னாரில் மீண்டும் எண்ணெய் வள ஆய்வு

மன்னாரில் மீண்டும் எண்ணெய் வள ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது. இது தொடர்பாக அந்நிறுவனம் வெளிநாட்டு எண்ணெய்வள நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றது.

தமிழ் நாடு காவேரி பகுதியில் இந்தியா தற்போது எண்ணெய் வயல்களை நிறுவி உள்ளது. எண்ணெய் வளம் மிக்க இப்படுகையின் 12 ஆயிரத்து 600 கிலோ மீற்றர் பரப்பு இலங்கையின் பிரதேசத்துக்குள் உள்ளது.

இப்பிரதேசத்தில் ஆழ்வாராய்ச்சிகளை மேற்கொள்வதன் மூலம் எண்ணெய் வளத்தை பெறமுடியுமென தெரியவந்துள்ளது

இந்த ஆராய்ச்சியில் ஈடுபட 4 வெளிநாட்டு நிறுவனங்கள் ஆர்வம் கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-14)

## கொக்குவில், ஒலுவில் பகுதிகளில் விமான ஓடுதளம்

### புலிகள் அமைத்துள்ளனராம்

கொழும்பு, மே 15

விடுதலைப் புலிகள் கொக்குவில் மற்றும் ஒலுவில் பகுதிகளில் இரண்டு விமான ஓடுதளங்களை அமைத்துள்ளனர் என்று வவுனியாபொலிஸ் புலனாய்வு அதிகாரிகளை மேற்கோள் காட்டி ''த ஐலண்ட்'' பத்திரிகை தெரிவித்துள்ளது.

விடுதலைப்புலி உறுப்பினர் மூவர் விசேட விமான பயிற்சி பெற்றுக் கொண்டு யாழ்ப்பாணம் திரும்பி உள்ளனர்.

இவர்களை விட விமான பைலட் அனுமதிப் பத்திரம் பெற்ற ''சொரணி'' எனப்படுபவரும் இவர்களுடன் உள்ளார்.

வடக்கு-கிழக்கு பகுதிகளில் படையினர் மீது விமானத் தாக்குதல்களை நடத்த விடுதலைப் புலிகள் விமானப் படையை அமைத்துதயாராகி வருகின்றனர்.

இவ்வாறு ''ஐலண்ட்'' செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ 14)

## பொலீஸ் தற்கொலைப் படை நிறுவுமாறு ஆலோசனை

கொழும்பு,மே 15

பொலீஸ் தற்கொலைப் படைப் பிரிவு ஒன்றை உடனடியாக நிறுவுமாறு எம்பிலிப்பிட்டிய பொலீஸ் மா அதிபருக்கு பொலீஸ் சார்ஜன்ட் ஒருவர் ஆலோசனை கூறியுள்ளார்.

எம்பிலிப்பிட்டிய பொலீஸ் நிலையத்தில் நடந்த அணிவகுப்பு ஒன்றிலேயே பொலீஸ் சார்ஜன்ட் குரும் என்பவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்

விடுதலைப்புலிகளுக்கு எதிராக போராட பொலீஸ் தற்கொலைப் பிரிவு ஒன்றை அமைக்குமாறும் ஆலோசனை தெரிவித்த அவர் தாம் முதல் உறுப்பினராக அதில் சேர்வதாகவும் கூறினார். (ஐ-3)

## வாகனத்தில் இருந்து வெடிமருந்து மீட்பு!

கொழும்பு, மே 15

ஹோமாகம பொலீஸார் வாகனங்களை திடீர் பரிசோதனை செய்த சமயம் ஒரு தொகுதி வெடிமருந்தை கைப்பற்றியிருப்பதாக தெரிவித்துள்ளனர்.

வாகனத் தடையை விதித்து சந்தேகத்திற்குரிய மோட்டார் வாகனம் ஒன்றை சோதனையிட்ட சமயம் பொலீஸார் இதனை கண்டு பிடித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

கே. பி. எட்வேட் குமாரவேல், எம். எச். பிரியந்த என்ற இரு சந்தேக நபர்கள் விசாரணைக்கென தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

[ஐ-4]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கொடிய வைரஸ் நோயான எபோலா மத்திய ஆபிரிக்காவில் பரவுகிறது

## ஸயர் நாட்டில் 49 பேர் மரணம்

கின்ஷாஸா, மே 15

மத்திய ஆபிரிக்க நாடான ஸயரில் பரவிவரும் 'எபோலா' என்ற கொடிய வைரஸ் நோயினால் இதுவரை 49 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

உயிரிழப்புக்கள் இன்னும் அதிகரிக்கக்கூடும் என்று உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரித்துள்ளது.

''எபோலா'' நோயினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கும் தலைநகர் கின்ஷாஸா நகரம் நோய்ப் பிரதேசமாக பிரகடனப்படுத்தப் பட்டிருக்கின்றது.

உலகில் 'எய்ட்ஸ்' போன்ற ஒருசில கொடிய நோய்களில் ''எபோலா'' வைரஸ் நோயும் ஒன்றாகும்.

பொதுவாக இந்நோய் குரங்குகள், பன்றிகள் போன்ற மிருகங்களிடையே ஏற்படுவதுண்டு. ஆனால் இடையிடையே மனிதர்களையும் அது பிடிக்கிறது.

உலகை அச்சுறுத்தும் வகையில் ஸயரில் இந்நோய் தற்சமயம் பரவிவருகிறது.

'எபோலா' வைரஸ் நோய் இரத்தம் அல்லது உடல் கழிவுகள் மூலம் ஒருவரில் இருந்து மற்றவருக்குப் பரவுகிறது.

திடீர் காய்ச்சலுடன் ஆரம்பிக்கும் இந்நோயினால் கண்கள், உதடுகள், காதுகள், தோல் துவாரங்கள் ஆகியவற்றில் இருந்து இரத்தப் பெருக்கு ஏற்பட்டு மரணம் சம்பவிக்கிறது.

மனிதர்களிடையேயான தொடர்புகள் மூலம் பரவும் இந்நோய்க் கிருமிகளை அழிப்பதற்கோ, தடுப்பதற்கோ இதுவரை மருந்து எதுவும் உலகில் கண்டுபிடிக்கப்படவில்லை.

ஸயரில் உள்ள 'எபோலா' நதியின் பெயரே இந்த நோய்க்குச் சூட்டப்பட்டுள்ளது.

ஸயர் நாட்டில் மூன்று நகரங்களில் இந்நோய் வேகமாகப் பரவியுள்ளது.

இந்நோயைக் கட்டுப்படுத்த உலக சுகாதார ஸ்தாபன வைத்திய நிபுணர்கள் போராடி வருகின்றனர். அமெரிக்க டாக்டர்களும் ஏற்கனவே கின்ஷாஸா நகருக்கு விரைந்துள்ளனர்.

ஸயரின் தலைநகரமான கின்ஷாஸாவில் இருந்து எவரும் வெளியேறாமல் நகரம் மூடப்பட்டுள்ளது.

நோய் பரவியுள்ள ஏனைய நகரங்களில் சில இடங்களில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

தலைநகர் கின்ஷாஸாவில் 50 லட்சம் மக்கள் வசிக்கின்றனர். அங்கு இந்நோய் பரவுவது கட்டுப்படுத்தப்படாவிட்டால் உயிரிழப்புகள் மிக மோசமாக இருக்கும் என்று அஞ்சப்படுகிறது.

கின்ஷாஸாவில் 150 சடலங்களை மட்டும் வைக்கக் கூடிய சவச்சாலை மட்டுமே அங்குள்ள ஒரே ஆஸ்பத்திரியில் உள்ளது.

''எபோலா'' நோயினால் பாதிக்கப்பட்டும் 10 பேரில் 9 பேர் உயிரிழந்திருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது.

ஸயரில் இருந்து இந்நோய் வெளியிடங்களுக்குப் பரவுவதை முதலில் கட்டுப்படுத்த வேண்டும் என மருத்துவக்குழுக்கள் எச்சரிக்கின்றன.

ஏற்கனவே சில ஐரோப்பிய நாடுகள் தமது நாட்டுக்கு ஸயரில் இருந்து வரும் பயணிகளைக் கண்காணிக்க நடவடிக்கை எடுத்துள்ளன. [ஐ-5]

---

**படையினர்--**

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

மடைந்தவராவார்.

சாயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஷெல் தாக்குதலுக்கு சஞ்சி வீட்டில் இருந்து வெளியே தோட்டத்துக்குச் சென்று கொண்டிருந்த சமயம் இவர் சாயமடைந்தார் என்று தெரிவிக்கப்பட்டது (இ-15)

---

**திருமலையில....**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெறிக்கப்பட்ட பகுதி அதிசயிக்கத் தக்க முறையில் ஒரு துண்டாகக் கிடைத்துள்ளதாகவும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நாசகாரிகளாக மாற்றப்பட்ட கண்ணாடி இழைப்படகுகள் ஒவ்வொன்றிலும் 100 கிலோ கிராம் ''ஆர். டி. எக்ஸ்.'' வெடிமருந்துப் பொருள் வைக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்

இந்தப் படகுகள் இரண்டும் வடபகுதியிலிருந்து கொண்டு வரப்பட்டு, திருமலைத் துறைமுகத்துக்குச் சமீபமாக இழுவைப்படகு ஒன்றுடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் கருதப்படுகிறது.

தாக்குதலை நடத்தியவர்கள் தமது இலக்குகளை நெருங்கியதும் சுமார் 100 மீட்டர் தொலைவில்வைத்தே இரண்டு நாசகாரிகளையும் மிதக்க விட்டுவிட்டு —

தாம் பிராணவாயு முகமூடிகளை அணிந்து கொண்டு நீரில் மூழ்கி பின்னர் படகுகளின் மிதவை டாங்கிகளை நிரப்பி அவற்றையும் நீரின் கீழ் இழுத்துச் சென்று இலக்குகளில் மோத விட்டிருக்க வேண்டும் என ஆய்வுகள் தெரிவிப்பதாகக் கூறப்படுகிறது. (அ)

---

## இந்து இளைஞர் பேரவை கொடி தினம்

கொழும்புத்துறை, மே 15

யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் வருடாந்தக் கொடித் தினம் இன்று திங்கட்கிழமை முதல் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நடபெறும்.

இன்று காலை 9.00 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் பேரவையில் தலைவர் திரு வே. கனபாலன் தலைமையில் வைபவம் நடைபெறும்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்குவார். (இ-30)

---

# முதலாவது அணியினரின் உண்ணாவிரதம் முடிந்தது

## இரண்டாவது அணி தொடரும்

யாழ்ப்பாணம் மே. 15

கடந்த ஐந்து நாட்களாக யாழ் பல்கலைக்கழக வளவில் உண்ணாவிரதம் இருந்த முதலாவது அணி மருத்துவ மாணவர்கள் நேற்றுடன் அதனை நிறுத்திக் கொண்டனர்.

சுழற்சிமுறையில்கீழ்நேற்று முன் தினம் உண்ணாவிரதம் இருக்கத் தொடங்கிய இரண்டாவது அணியினர் தொடர்ந்து அதில் ஈடுபட்டுள்ளனர்.

மருத்துவ மாணவர்களின் உண்ணாவிரதத்துக்கு ஆதரவு தெரிவிக்கு முகமாக, ஏனைய பீட மாணவர்கள் அடையாள உண்ணாவிரதமிருந்து வருகின்றனர்.

வட இலங்கை மருத்துவக் கல்லூரி மாணவர்களை யாழ். மருத்துவ பீடத்தில் இணைப்பது என்ற முடிவுக்கு ஆட்சேபம் தெரிவித்தே மருத்துவ பீட மாணவர்கள் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர். (அ-7)

---

## சித்தவைத்திய கூட்டுறவாளர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 15

பிரதேச சபைகளின் சித்த ஆயுர்வேத வைத்திய கலாநிதிகள், நிர்வாக உத்தியோகத்தர்கள், சித்த வைத்திய கூட்டுறவுச்சங்க நிர்வாகிகள், மருந்தகக் கலவையாளர்கள், தொண்டர்கள் ஆகியோரின் கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை காலை 11 மணிக்கு 572, மருத்துவமனை வீதியில் அமைந்துள்ள கூட்டுறவு அலுவலகத்தில் நடைபெறும்.

வட கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் திரு.க. டிவகலாலா முன்னிலையில் நடைபெறும் இக் கலந்துரையாடலிற்குத் தவறாது சமூகந்தரும்படி சம்பந்தப்பட்ட சகலரையும் சித்த வைத்திய கூட்டுறவுச்சங்கத் தலைவர் கேட்டுக் கொள்கின்றார். [க]

## இரத்தம் தேவை

யாழ்ப்பாணம், மே 15

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் ஓர் நோயாளிக்கு 'ஓ' பொசிரிவ் குருதி மிக அவசரமாக தேவைப்படுகின்றதுஎன்றும்—

சமூக மனப்பான்மை உள்ளோர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரி சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு நோயாளர் நலன்புரி சங்க நடுவப் பணியகம் அறிவித்துள்ளது. (இ)

## தாச்சி சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், மே 15

யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சி சுற்றுப்போட்டிகளில் இன்று இணுவில் சந்தை மைதானத்தில் நடைபெறும் கால் இறுதி ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள்.

★ பல்லசுட்டி காந்திஜி வி.க எதிர் மயிலிட்டி ஒற்றுமை வி.க

★ கொக்குவில் காந்திஜி வி.க எதிர் மயிலிட்டி இளங்கோ வி.க. (இ 7)

## தூத்துக்குடி கப்பல்களுக்கு அனுமதி மறுப்பு

கொழும்பு, மே 15

தமிழகத்தில் தூத்துக்குடியில் இருந்து உணவுப் பொருள்களையும் ஏனைய பொருள்களையும் ஏற்றிவரும் படகுகள் கொழும்பு துறைமுகத்துக்குள் வர தடை விதிக்கப்பட்டுள்ளது

நாட்டின் பாதுகாப்பு காரணங்களுக்காக மேற்படி தடை விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இந்தப் படகுகள் காலித் துறைமுகத்துக்கு திருப்பப்படுகின்றன. (இ-3)

## பாக்குநீரிணை ரோந்து செய்தி இந்தியா மறுப்பு

புதுடில்லி மே 15

இந்திய கடற் படையின் ரோந்துக் கப்பல்கள் பாக்கு நீரிணையில் புலிகளுக்கு எதிரான தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதாக வெளிவந்த செய்தியை இந்திய வெளிவிவகார அமைச்சு மறுத்து ளது

வழமையான ரோந்து நடவடிக்கைகளே இடம் பெற்று வருகின்றன என்று அது தெரிவித்துள்ளது. (இ)

## கொழும்பில் பலத்த பாதுகாப்பு

கொழும்பு, மே 15

வெசாக் தினத்தில் விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தக்கூடும் என்ற அச்சம் காரணமாக கொழும்பு நகரில் பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளனர். (இ-7)

---

**இனப்பிரச்சினை...**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிலமாதங்களின் பின்னர் பேச்சுவார்த்தைக்கு அவர்கள் செல்லவே வேண்டும்.

யுத்தம் நீடித்தல் அரசின் நடவடிக்கைகள் யாவும் ஸ்தம்பிதம் அடையும் திட்டங்களை தற்காலிகமாக இடைநிறுத்த வேண்டி ஏற்படும்.

இருசாராரும் மூன்றாவது தரப்பு ஒன்றின் உதவியுடன் புதிய நடவடிக்கைகளை மேற்கொள்ள தயாராக வேண்டும் — என்றார். (இ-3)

---

# நிலைமை மோசமடைவதற்கு முன் தீர்வுத் திட்டத்தை முன்வையுங்கள்

## அரசுக்கு தயாரத்தின ஆலோசனை

கொழும்பு, மே 15

''நிலைமை மோசமடைவதற்கு முன்னர் அரசு தனது தீர்வுத் திட்டத்தை முன்வைக்க வேண்டும்'' இப்படி ஐ.தே.க. எம்.பியான பி. தயாரத்ன தெரிவித்துள்ளார்.

நாடாளு மன்றத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

புலிகளுடன் பேசித்தான் தீர்வை முன்வைக்க வேண்டும் என்று காத்திருக்காமல் அரசு உடனடியாக தீர்வுத் திட்டத்தை வெளியிட வேண்டும்.

குறுகிய காலத்துக்குள் நூற்றுக்கணக்கான படையினர் கொல்லப்பட்டுள்ளனர். பல கோடி ரூபா பெறுமதியான உபகரணங்கள் இழக்கப்பட்டுள்ளன. படையினரின் நிலை மோசமாகியுள்ளது.

இன்று விடுதலைப் புலிகள் அரச படையினரை விட முன்னணியில் இருக்கின்றனர். பலம் வாய்ந்த நிலையில் அவர்கள் உள்ளனர்.

விஷவாயு, மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்கள் அவர்களிடம் இருக்கக்கூடும். அப்படியானால் நிலைமை இன்னும் மோசமடையலாம்.

இப்போது மீண்டும் இந்திய உதவி பெற முயற்சி செய்யப்படுகிறது. ஆனால் முன்னர் இந்தியப் படையை எதிர்த்தார்கள், இந்திய உற்பத்திகளை தீயிட்டுக் கொளுத்தினார்கள். ஆனால் இப்போது அவர்களின் உதவியை பெற முயற்சிக்கப்படுகிறது என்றார். (இ-3)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் ஈ. எஸ். பேரம்பலம் சகநிறுவனத்தின் ஆதரவுடன் ஜொலி ஸ்ரார்ஸ் கிண்ணத்துக்காக நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் ஆட்டத்தில் இன்று நடக்கும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

யாழ். இந்துவில்

காலை 8.30 மணி — மானிப்பாய் பரிஷ் வி.க ''ஏ'' அணி எதிர் உதயன் வி.க. அணி.

★ பி.ப 1-30 மணி சென்றலைட்ஸ் வி.க 'புளூஸ்' அணி எதிர் கிறாஸ் கொப்பஸ் வி.க அணி

கொக்குவில் இந்துவில்

★ காலை 8 30 மணி — மல்லாகம் கிராம அபிவிருத்தி சங்க அணி எதிர் ஜொலி ஸ்ரார்ஸ் கோல்ட் அணி.

★ பி.ப 1-30 மணி — ஸ்ரான்லி வி.க அணி எதிர் மானிப்பாய் பரிஷ் வி.க 'பி' அணி. (இ-3)

---

**யாழ்ப்பாணத்தை...**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிக்கை இல்லை.

பாதுகாப்பு அமைச்சு உப்புச் சப்பற்ற முறையில் பல முறை நம்பிக்கை வாக்குறுதிகளை தந்துள்ள போதிலும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இராணுவ முகாம்கள் பல — குறிப்பாக பூநகரி — ஆயிரக்கணக்கான விடுதலைப் புலிகளால் சூழப்பட்டுள்ளதாக அதிகாரபூர்வமற்ற இராணுவ வட்டாரங்கள் உறுதி செய்கின்றன.

விரைவில் விடுதலைப் புலிகளிடம் இருந்து பெரும் தாக்குதலை இராணுவம் எதிர்நோக்க வேண்டிய அறிகுறிகள் தென்படுகின்றன.

வான்வெளி பாதுகாப்பு எதுவும் இன்றி அரசால் என்ன செய்ய முடியும்.

**இந்தியாவின் பங்கு**

அந்நிய நாடுகளின் உதவியை நாடலாம் என்று அரசு முதலில் நினைத்தது ஆனால் பாக்குநீர் சந்தியில் கண்காணிப்பை அதிகமாக்கு வதை தவிர வேறு எதையும் இந்தியா செய்ய முன்வரவில்லை.

இழந்து விட்ட விமானங்களுக்கு பதிலாக சில விமானங்களை இந்தியா அளிக்கக் கூடும்.

இராணுவத்தின் மன உற்சாகம் பெரிதும் கீழே சரிந்து விட்டது

அதேநேரத்தில் விமானப் படையை அடக்கி விட்ட விடுதலைப் புலிகள் உச்சாகம் மிக உச்சத்தில் இருக்கக்கூடும்.

யாழ்ப்பாணத்தை கைப்பற்றும் மிகப்பெரிய இராணுவ நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இராணுவ தளபதி விருப்புகிறார்.

ஆனால் வெவ்வேறான இரண்டு போர் முனைகளில் போரிட வேண்டியிருக்கும் என்பதால் கிழக்கு பகுதியை முழுமையாக இராணுவம் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்த பின்னர் தான் அது இயலும். அதற்கே குறைந்தது ஓரிரு மாதங்கள் பிடிக்கும் என இராணுவமே மதிப்பிடுகிறது

ஒக்டோபர் மாதம் பருவமழை தொடங்கிவிடும் எனவே இந்த ஆண்டில் நடவடிக்கை எடுக்க சில மாதங்களுக்குள் செயற்பட்டாக வேண்டும்.

யாழ்ப்பாணத்தை கைப்பற்றுவது இயலும் என்று வைத்துக்கொண்டாலும் அதனால் இனப்போர் முடிந்துவிடாது.

பொதுமக்களிடையே ஏற்படும் கடும் உயிர்ச் சேதங்கள் புலிகளுக்கு ஆதரவை அதிகரிக்கச் செய்யும்.

அமைதி முயற்சிகள் இன்னும் தடம்புரளவில்லை என்று அரசு கூறுவது உண்மை என்றால் அரசு புதிய அரசியல் தீர்வுத் திட்டங்களுடன் வர வேண்டும்.

இப்படித் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

---


# திறப்பு விழா

★ சோழன் களஞ்சியம் ★

இன்று (15 - 05 - 95) காலை 9-30 மணியளவில்

(அருச்சுனாசாலை யாழ்ப்பாணத்தில்)

புதிதாக திறக்கப்பட உள்ள

சோழன் களஞ்சியத்தில்

✶ உழுந்து ✶ பயறு ✶ கடலை

மற்றும்

✶ தானிய வகைகளும் ✶ எள்ளு ✶ கச்சான்

ஆகியனவும்

மொத்தமாகவும், சில்லறையாகவும் கொள்வனவு, விற்பனவு செய்யப்படும்

என்பதை

கொள்வனவாளர்கள், விற்பனையாளர்கள், பாவனையாளர்கள்

அனைவருக்கும்

★ மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம் ★

# சோழன் களஞ்சியம்

66 அருச்சுனாசாலை, யாழ்ப்பாணம்.

[சி-1216]


---

# மரண அறிவித்தல்கள்

## நாகமுத்து யோகரத்தினம்

[உரும்பிராய்]

நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் உரும்பிராய் வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய நாகமுத்து யோகரத்தினம் 13-05-95 இல் ஜேர்மனியில் காலமானார்.

இவர் நாகமுத்து காலஞ் சென்ற அமராவதி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராசநாயக (C. T. B யாழ்ப்பாணம்), இராசலட்சுமி ஆகியோரின் அன்பு மருமகனும், இந்திராணியின் பாசமிகு கணவரும், விஜிதா, சுஜித்தா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் இராசரெத்தினம் கனகரெத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், புஸ்பராணி, இராமச்சந்திரன் (கல்வித் திணைக்களம் திருகோணமலை, காலஞ்சென்ற மகேந்திரராசா, சாந்தி உஷா இராஜ்குமார் (ஆசிரியர், சைவத் தமிழ் வித்தியாசாலை, உரும்பிராய்) ஆகியோரின் மைத்துனரும் ரகசுந்தரம், தயானி விலலியம் (போதகர், சீயோன் தேவாலயம் யாழ்ப்பாணம்), லோகநாதன் (Holland) ஆகியோரின் சகலனுமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்

இ. இராஜ்குமார் [ஆசிரியர்]

(சைவத் தமிழ் வித்தியாசாலை உரும்பிராய்)

உரும்பிராய் கிழக்கு. (36651)

---

## திருமதி வீரசிங்கம் செல்லம்மா

சுன்னாகத்தைச் சேர்ந்த திருமதி வீரசிங்கம் செல்லம்மா நேற்றுக் காலமானார்

இவர் காலஞ்சென்ற வீரசிங்கத்தின் அன்பு மனைவியும், குணரத்தினம் (இளைப்பாறிய பொதுச் சுகாதார வெளிக்கள உதவியாளர், மலேரியா தடை இயக்கம்) காலஞ்சென்ற குலமணி, மற்றும் குணவதி, குணேஸ்பரன் (உதவி களஞ்சிய பொறுப்பாளர், உரக் கூட்டுத் தாபனம், அநுராதபுரம்), குணபாலச்சந்திரன் (இத்தாலி), குணபூபதியம் ஆகியோரின் அன்புத் தாயாரும், சத்தியேஸ்வரி, தேவதாசன் (சுற்றாடல் நஷனல் வங்கி, யாழ்ப்பாணம்), சரஸ்வதி, வைத்தீஸ்வரன் [உதவி அரசாங்க அதிபர் பணிமனை, தெல்லிப்பளை], ஆகியோரின் அன்பு மாமியாரும் சாந்தினி ஜெயந்தினி, கோணேஸ்வரன் (மகாஜனக்கல்லூரி உ.த. மாணவன்), நிரஞ்சனா (இராமநாதன் கல்லூரி உ. த. மாணவி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று [14-5-95] சுன்னாகம் கொத்திபாலடி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது, இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்

செ. வைத்தீஸ்வரன் [மருமகன்]

இலங்கைவங்கி முன்பாக, சுன்னாகம் [36654]

---

## வேலாயுதபிள்ளை குருநாதன்

[ஓய்வுபெற்ற மின்மானி வாசிப்பாளர் யாழ். மாநகர சபை]

சுந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதபிள்ளை குருநாதன் 14-5-95 காலமாகிவிட்டார்

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சபாரத்தினம் பூரணம் தம்பதிகளின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், சுரேந்திரன் (பிரான்ஸ்), தேவானந் (பிரான்ஸ்), பிரேம்நாத் (கனடா), நிர்மலநாதன் (பிரான்ஸ்), ஸ்ரீரங்கநாதன், (அரவிந் வீடியோ & போட்டோ ஆனைப்பந்தி), நவலோகநாதன் [பிரான்ஸ்], காலஞ்சென்ற திருமதி ராஜி தயாபரன், மற்றும் நரேந்திரன் [கனடா] லோகநாயகி [கனடா] ஆகியோரின் அன்புத் தந்தையும், கலாவாணி (பிரான்ஸ்), கனகாம்பிகை (பிரான்ஸ்) வளர்மதி, சரோஜா (பிரான்ஸ்), செந்தில்குமார் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், வர்ஷினி, சுமந்தினி, சுபோதினி, அபிராமி, சாயி, சாயிராம், பவித்ரா, சமித்ரா, பிரியங்கன், பிரியங்கா, வினோத் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16 - 5 - 95 செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்

ஸ்ரீரங்கநாதன் [மகன்]

''அரவிந்''

[வீடியோ & போட்டோ]

கலைவாணி மில் ஒழுங்கை,

கொக்குவில் கிழக்கு,

கொக்குவில். (36655)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 392/3 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 15-05-1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org